தென்மொழி

தமிழ் வாழ வேண்டுமா ?

'தமிழ் வாழ்க' வென்பதிலும் தமிழ்வா ழாது;
தமிழ்ப் பெயரை வைப்பதிலும் தமிழ்வா ழாது;
குமிழ்சிரிப்பைப் பெருஞ்சிரிப்பாய் அவிழ்த்துக் கொட்டுங்
கொக்கரிப்புப் பேச்சாலுந் தமிழ்வா ழாதே!
அமிழ்கின்ற நெஞ்செல்லாம், குருதியெல்லாம்
ஆர்த்தெழும் உள் உணர்வெல்லாம் குளிரு மாறே
இமிழ்கடல்சூழ் உலகமெல்லாம் விழாக்கொண் டாடி
ஏற்றமிகச் செய்வதிலும் தமிழ்வா ழாதே!

பட்டிமன்றம் வைப்பதிலும் தமிழ்வா ழாது;
பாட்டரங்கம் கேட்பதிலும் தமிழ்வா ழாது;
எட்டிநின்றே இலக்கியத்தில் இரண்டோர் பாட்டை
எடுத்துரைத்துச் சுவைபடவே முழக்கி னாலும்,
தட்டி, சுவர், தொடர்வண்டி, உந்துவண்டி
தம்மிலெல்லாம் "தமிழ்தமிழ்"—என் றெழுதி வைத்தே
முட்டிநின்று, தலையுடைத்து முழங்கி னாலும்
மூடர்களே, தமிழ்வாழப் போவ தில்லை!

செந்தமிழ்செய் அறிஞர்களைப் புரத்தல் வேண்டும்;
செப்பமொடு தூயதமிழ் வழங்கல் வேண்டும்;
முந்தைவர லாறறிந்து தெளிதல் வேண்டும்;
முக்கழக உண்மையினைத் தேர்தல் வேண்டும்;
வந்தவர்செய் தீங்குகளால் தமிழர்க் குற்ற
வரலாற்று வீழ்ச்சிகளை எடுத்துக் கூறி,
நொந்தவுளஞ் செழித்ததுபோல் புதிய வையம்
நோக்கிநடை யிடல்வேண்டும்! தமிழும் வாழும்!

தண்டமிழில் பிறமொழியைக் கலந்து பேசுந்
தரங்குறைந்த தமிழ்வழக்கை நீக்கல் வேண்டும்!
தொண்டரெலாந் தெருக்களிலே கடைகள் தோறும்
தொங்குகின்ற பலகைகளை மாற்றச் சொல்லிக்
கண்டுநிகர் தமிழ்ப் பெயர்ப்பால் புதுக்கல் வேண்டும்!
கற்கின்ற சுவடிகளில், செய்தித் தாளில்,
விண்டுரைக்கா அறிவியலில், கலையில் எல்லாம்
விதைத்திடுதல் வேண்டும் தமிழ்; வாழும் அன்றே!

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி: 8 ஓலை: 8-9. விலை 75 காசு.

www.thamizham.net - Free E book No 7427

நமக்கு வந்த மடல்கள்.

0: 227: தமிழக மறுமலர்ச்சித் தலைவ, 'பிராமணியத்திற்கு ஓர் எச்சரிக்கை' தலைமையுரை படித்தேன். அதில் பார்ப்பனர் செய்து வரும் சீர்கேடுகளைத் தெளிவாக விளக்கியுள்ளீர். மேலும் இந்த நேரத்தில் வெளியானது மிகப் பொருத்தமே. திரு. இராசாசி தம் உண்மை உருவத்தை வெளிகாட்டத் தலைப்பட்டுவிட்டார். அவரின் கட்சியோ அன்றி அவரின் கூட்டணியோ ஆட்சிக்கு வருமாயின் தமிழகம் பாழாக்கப்படும். நம் உயிர்த் தமிழ் கடலில் தள்ளப்படும். இது திண்ணம். திரு. இராசாசி தி.மு.க.வுக்கு எதிராகக் குரல் எழுப்பினது போதுமென, அவரின் தாளிகை, கிழமை, மாதிகை, தாள்கள் எல்லாம் கூக்குரலிடுகின்றன; கொக்கரிக்கின்றன; ஒப்பாரி வைத்து ஓலமிடுகின்றன. நச்சுக் கருத்துகளை வரைந்து வரைந்து தள்ளுகின்றன. இவைகட்குச் சரியான எதிரடி கொடுக்கவில்லை யெனில் நாம் பின்னுக்குத் தள்ளப்படுவோம். நாம் நேரடி நடவடிக்கைகளில் இறங்க வேண்டியதுதான் ஒரே வழி. தமிழனுக்கென்று ஒரு தாளிகை இருந்தால் இவையெல்லாம் இடந்தெரியாமல் பறந்து போயிருக்கும்...!

—ந. தேவராசன், வேலூர்-1.

0: 228: அன்புள்ள அய்யா! 'தென்மொழி' என்னும் தெவிட்டாத தேன் ஏடு கண்டேன். தங்கள் ஆசிரியவுரையும் கண்டேன். உள்ளத்தின் உணர்ச்சி வடிவத்தை எழுத்து வடிவமாக்கி, எண்ணங்களைப் பொங்கும் எரிமலையென வெடித்திருந்தீர்கள்! தளராத தங்கள் பணிக்கு என் தமிழ் உள்ளம் நன்றி சொல்லும். வாழ்க தங்கள் பணி! வெறும் பாராட்டு மடல் மட்டுமன்று இது! தமிழனின் நிலைகண்டு துயரத்தில் வெந்து கொண்டிருக்கும் ஓர் இளைஞனின் எண்ணக் குவியல்கள் இவை! தங்களைப் போன்ற தமிழ் உள்ளங்களைக் கண்டு பெருமையுறுகிறேன், நான்! உண்மையான வரலாறுகள் மறைக்கப்பட்டுத் தமிழன் கண் முன்னால் 'பிராமணீயம்' ஏறுநடை போட, நாம் அதைப் பார்த்திருப்பதா? இற்றை இளைஞர்களின் நிலை வெட்கப்பட வேண்டிய ஒன்று! பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளில் சிக்கிப் பகுத்தறிவை மறந்துவிட்டுப்—படிப்பை, வெறும் பணம் சம்பாதிக்கும் கருவியாகப் பயன்படுத்தி—நாகரிகம் என்ற போர்வையிலே இருந்து கொண்டு எதையெதையோ செய்து வருகின்றனர். திரைப்படம்—காதல்—இவைதாம் நமது இளைஞர்களின் எண்ணங்களாக இருக்கின்றன. 'பெரியாரை' நினைத்தாலே வெறுப்பு—அவர்கள் மனத்தில் பார்ப்பனப் பேய்களின் கொடூர நச்சு விதைகள் ஊன்ற விடாமல் தடுக்கப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் ஒரே வழி—பிரிவினை ஒன்று தான்! பிரிவினைப் போராட்டம் விரைவில் வரவேண்டும். பெரியார் காலத்திலேயே இதற்கான வழியைக் கண்டாக வேண்டும்...!

—இளஞ்சேரன், இளைஞர் பகுத்தறிவுப் பாசறை, பெருவளப்பூர்.

0: 229: பெருமதிப்பிற்குரிய ஐயா! மடங்கல் இதழைக் கண்டோம். அட்டைப்படப் பாடலும், ஆசிரியவுரையும் சிறப்பாக இருந்த போதிலும், பயிற்சி மொழி பற்றி நீண்ட உரையினை எதிர்பார்த்திருந்து ஏமாறினோம். பயிற்சி மொழிக்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பு, சல சலப்பே தவிர வேறொன்றும் இல்லை. ஆனாலும் இதை நாம் முழு முயற்சியுடன் முறியடித்தே தீரல் வேண்டும். பார்ப்பனர்கள் இதைப் பயன்படுத்தித் தமிழக அரசைக் கவிழ்க்கக் காமராசருடன் ஒன்று

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7427



தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி:8 ஓலை: 8, 9.

(துலை-சிலை-) தி. பி. ௨00௧- நவம்பர்-திசம்பர்.-1970.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழியின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

தேர்தலில் தி. மு. க. வையே வெற்றிபெறச் செய்க!

நம் தொண்டு முற்றுந் தூய தனித்தமிழ்த் தொண்டே எனினும், அரசியல் நிலையிலும் குமுகாய நிலையிலும் நம் கொள்கை வறுமை, அறியாமை, மூடநம்பிக்கை, அயலின மேலாண்மை, குல, மத வேறுபாடு- இவற்றினின்று தமிழ்நாட்டு மக்களை விடுவித்தலும், சமவுடைமைப் பொருள் நிலைக்குப் பாடுபடுதலுமே யாகும். எனவே மக்களரசின் உறுப்புகளாய் உள்ள நாம், மக்களாட்சி அமைப்பிற்கென உறுதிப்படுத்தப் பெற்ற பொதுத்தேர்தலை, என்ன கரணியத்தாலும் புறக்கணித்துவிட முடியாது. நம்கொள்கையை அப்படியே ஏற்றுக்கொள்ளும் ஒரு கட்சியை நாமே தேர்தலில் நிற்க வைத்தா

www.thamizham.net - Free E book No 7427

லன்றி, தேர்தலில் போட்டியிடும் கட்சிகளில், நம் கொள்கைக்கு ஓரளவு உடன்பட்டுப் போகும் ஏதாவதொரு கட்சியை நாம் வரவேற்றே யாகல் வேண்டும். குடியரசமைப்பில் கட்சிகளின் அமைப்புகளையோ, அவற்றின் இணைகூடுதல்களையோ நாம் தடுக்கமுடியாது. கட்சிகளற்ற ஓர் அரசு தானே உருவானாலன்றி, அதனை உருவாக்கும் பொறுப்பை எவரும் எடுத்துக் கொள்ளுதல் இயலாது. அதுவரை நாமும் தேர்தல்களுக் குட்பட்டுப் போகும் செம்மறியாட்டுக் கூட்டங்கள் தாம்! வேண்டுமானால், வெள்ளாட்டுக் கூட்டம் என்று கருதிக் கொள்ளலாம்.

அண்மையில் வரப்போகும் இடைப் பொதுத்தேர்தலில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் இரண்டே அணிகள் தாம் நிற்பதாக நாம் உருவகித்துக் கொள்வதில் பிழையில்லை. ஒன்று, பெரியார் தாங்கி நிற்கும் தி. மு. க. அணி. இரண்டு, இராசாசி தாங்கி நிற்கும் பேராய அணி. இவ்விரண்டு அணிகளையும் தாங்கி நிற்கும் இருபெரிய அரசியல் தலைவர்களுக்கும் சிற்சில தம்மியல்புகள் இருக்கின்றன. சென்ற தேர்தலில் இடம் மாறி எதிர்நின்ற இவ்விருவரும், இந்தத் தேர்தலில் தம்தம் இடங்களை மீண்டும் மாற்றிக்கொண்டாலும், எதிரெதிராகத்தாம் நிற்கின்றனர். எனவே அணிகளின் ஒட்டுமொத்தக் கொள்கைகளின் கூட்டுத்தொகையாக இத்தலைவர்களையே கணக்கிட்டுக் கொள்ளலாம். அப்படிப் பார்க்கையில், பெரியார் என்னும்கூட்டுத் தொகைக்குள் நம் கொள்கைக்குரிய எண்களும் அடங்கியிருப்பதைக் காணலாம்.

மேலும், தன்மானமும் விடுதலை நோக்கும் உடைய நமக்கு, இராசாசியின் 'வருணசிரமக்' கொள்கை முற்றிலும் மாறுபாடுடையது. நமக்குக் குலமும் மதமும் உடன்பாடல்ல. இராசாசிக்கு அவற்றை விட்டால் பிழைப்பே இல்லை. சமவுடைமைப் பொருள் நிலையை நோக்கி நாம் நடக்கின்றோம். இராசாசியோ அவரவர் உடைமை அவரவர் முன்வினைகளைப் பொறுத்ததே என்பவர். மொத்தத்தில் இராசாசி நம் நடைக்கு எதிர்நடை போடுபவரும், பெரியார் ஒத்தநடை யிடுபவருமாக இருப்பதை நாம் உணர்ந்து, தெளிதல் வேண்டும்.

தமிழ்மொழியைப் பொறுத்த அளவில், பெரியாரும் ஏன்—தி. மு. க. வினருங்கூட நமக்கு ஒத்து வராதவர்கள் தாம். தி. மு. க. வினரோ அவர்களுக்குத் தெரிந்த தமிழே தமிழ் என்று கூறுபவர். இராசாசியின் இனத்தவரோ, தாங்கள் இல்லாமல் தமிழே இல்லையென்று

www.thamizham.net - Free E book No 7427

கூறும் கொள்கையினர். பெரியாரின் தமிழ்க் கொள்கையைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதே இல்லை. ஆகவே, தெளிவாகச் சொன்னால் நமக்குத் தி. மு. க. வினர் துணையானவர்களும் அல்லர்; ஆனால் பகைவர்களும் அல்லர். இராசாசியோ முற்றிலும் தமிழுக்குப் பகைவர். துணையாக இல்லாமல் இருப்பவர்களைப் பார்க்கினும், பகைவர்களிடமே நாம் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். எனவே நமக்கு வாய்த்த இரண்டு அணியிலும், தி. மு. க. அணியே, அஃதாவது பெரியார் அணியே நாம் தேரத்தக்கது, என்று தெளிந்து கொள்ளுதல் வேண்டும். இவ்விடத்தில் இராசாசிக்குப் பின்நிற்கும் காமராசரைப் பற்றி நாம் கருதவே வேண்டியதில்லை. தென்மொழியின் முன்னாளைய ஆசிரியவுரைகளே அவரை நன்கு விளக்கி நிற்கும். இன்னொன்றையும் நீங்கள் பார்த்தல் வேண்டும். முன்நிற்கும் இரண்டு அணிகளில் பெரியார் எந்தப்பக்கம் நிற்கின்றார் என்று நீங்கள் கவலைப்படவேண்டா. இராசாசி எந்தப் பக்கம் என்று பாருங்கள்; அதற்கு எதிர்ப்பக்கத்தில் எந்த அணி நின்றாலும் சரி, அந்த அணியே உங்கள் அணி!



வெளிவந்து விட்டது!

பாவாணரின் அழகிய படத்துடன்

தமிழ் நாள்காட்டி

0 தனித்தமிழ் மாத வரிசைகள்!
0 பெரிய அளவில் எண்கள்.
0 அறிஞர்களின் பிறப்புநாள்கள், பிற சிறப்புக் குறிப்புகள்!
0 மாதந்தொறும் பாவாணரின் நூற்குறிப்புகள் பிற பாடற்குறிப்புகள்!

அனைத்தும் மலிந்தது! இன்றே வாங்குங்கள்!
ஒன்றின் விலை: 0-90 காசு. நூறு 8-00.
விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு கொடுக்கப்படும்.

வெளியீடு: "வளமனை" நெய்வேலி-1.

www.thamizham.net - Free E book No 7427

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி உருவாக்க-வெளியீட்டுத் திட்டம்!

-பெருஞ்சித்திரன்-

காலம் அறிந்து,ஆங் கிடமறிந்து, செய்வினையின்
மூல மறிந்து, வினைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து, துணைமை வலிதெரிந்து
ஆள்வினை ஆளப் படும். —குமாரகுருபரர்.

இக்காலத்தில் சொற்கள் அளவிறந்து வரைதுறையின்றிப் பயிலப் பெறுகின்றன. சொற் பொருளிலும், அதனடியாகத் தோன்றுஞ் செயலிலும் எவரும் கருத்துச் செலுத்துவதே யில்லை. இவ்வகையாற் கல்லாரும் கற்றுரும் ஒருவர் போலவே கணிக்கப் பெறுகின்றனர். பொதுவாகச் சொல்ல வேண்டுமானுல் கற்றுத் துறைபோய பேரறிஞர்க்கும், கல்லாத புல்லியர்க்கும் சொல்லளவில் வேறுபாடு காண்பது அரிதாகிவிட்டது. நறுமணமிக்க இயற்கை மலர்க்கும், வெறும் வண்ணத்தாளாலாகிய செயற்கை மலர்க்கும் பார்வையளவில் எவ்வாறு வேறுபாடு புலப்படுவதில்லையோ, அவ்வாறே தெள்ளிய நுண்புலம் வாய்ந்தார்க்கும், வெள்ளிய புன்புலம் மிக்கார்க்கும் எழுத்தளவில் வேறுபாடு புலப்படுவதில்லை. வறிஞரின் செல்வம் எவ்வாறு வாயடியும் கையடியும் மிக்கோரால் கொள்ளையடிக்கப் பெறுகின்றதோ, அவ்வாறே அறிஞரின் அறிவுச் செல்வமும், தாமே வருந்திக் கல்லாத, ஆரவாரமிக்க மூடரால் கொள்ளையடிக்கப் பெறுகின்றது.

1. அறிவும், அறியாமையும் கலந்து மயங்கும் இக்கால நிலை.

பழம்பெரு நூல்களினின்றும், பிறமொழிகளினின்றும் திருடப்பெற்ற கருத்துகளைத் தாமே விளைவித்த அல்லது கண்டுபிடித்த கருத்துகளைப் போல நூல்களில் பெய்வார் அளவிறந்து பெருகிவிட்டனர். தொல்பழஞ் செய்யுள்களில் உள்ள உயர்ந்த கருத்துகளும், சொற்களும், அடிகளும்—கற்பனைவளமும், அறிவோட்டமும் குன்றியவர்களால் பெரிதும் கையாளப் பெறுவதால், அவர்களை அறிஞர்களாக

www.thamizham.net - Free E book No 7427

வும், புலவர்களாகவும், பாவலர்களாகவும், மெய்யறிவுடையவர்களாகவும் பிறர் கருதி மயங்குமாறு ஒரு சூழ்நிலை உருவாகிவிட்டது. உண்மைக்கும் போலிக்கும் பளபளப்பிலும் உருவிலும் எவ்வகை மாற்றமும் காணமுடியவில்லை. மெய்த்துறவி போலவே ஆண்டியும் துவராடை பூண்டு உலா வருகின்றான். இருவர் சொற்களும் ஒலியளவில் ஒன்று போலவே தோன்றுகின்றன. உள்ளத்திற்கும் கள்ளத்திற்கும் வேறுபாடு புலப்படுவதில்லை. அன்பும் குழைவும் மயங்கி நிற்கின்றன.அறிவும் அறியாமையும் ஒன்றுபோல் மதிப்புப் பெறுகின்றன. கலையும், களியும் இரண்டறக் கலந்து உலாவருகின்றன.குதியாட்டத்திற்கும் நாட்டியத்திற்கும் வேறுபாடு தெரிவதில்லை. அறிஞர், பேரறிஞர், கலைஞர், பாவலர், நாவலர் போன்ற சிறப்புப் பெயர்களும்; நல்லது, சிறந்தது, உயர்ந்தது, ஒப்புயர்வற்றது முதலிய உயர் பண்புப் பெயர்களும்; இரக்கமுள்ளோன், ஈகையாளி, கொடையாளி, வள்ளல், வள்ளியோன் முதலிய அருளாண்மைச் சொற்களும் ஏற்றத் தாழ்வின்றி எல்லா நிலையினரும் எடுத்தாளும்படி வெறுஞ் சொற்களாக இழிந்து நிற்கின்றன. இத்தகைய கால, மன, அறிவு இடிபாடுகளுக்கிடையில் ஒருதுறையிலோ, சிலதுறைகளிலோ தம் வாழ்நாள் முழுதும் ஈடுபட்டு, உழைப்பாலும் ஊக்கத்தாலும் இழைத்துணர்ந்து, ஈண்டிய கேள்வியுடைய நுண்மாண் நுழைபுலமிக்க வல்லாரை அறிந்து கொள்ளுதலும், அவர் அறிவு முயற்சிக்குத் துணை நிற்றலும் அரிதினும் அரிதாகி நிற்பதை, சிறிதேகற்றவரும் நன்குஉணர்வர். '**அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது**'—என்னும் ஔவையார் உரை, இக்காலத்து—'**எளிதெளிது மாந்தராய்ப் பிறத்தல் எளிது**'—என்று மாற்றி உரைக்கினும் பொருந்துவதுபோல், பொல பொலவென்று பெருகிவரும் வெற்று மாந்தப் பிறப்புகளைப் பார்க்குங்கால், எதிர்காலத்தில் அறிஞர் பிறப்பும் அரிதாகிவிடுமோ என்று அஞ்ச வேண்டியுமுள்ளது.

இத்தகைய அவலச் சூழல், உலகில் உள்ள எந்த நிலப் பகுதியைப் பார்க்கினும், தமிழகத்தில் கங்கு கரையின்றிப் பெருகிப் பரவியுள்ளது. இன இழிவும், அறிவு மழுக்கமும் கடந்த மூவாயிரமாண்டுகளாகத் தமிழகத்தை அடிமை கொண்டுள்ளன. மொழியானும், இனத்தானும், அறிவானும் சிறந்து விளங்கிய பழந்தமிழ்க்குலம், படிப்படியாய்த் தாழ்ச்சியுற்று, இன்று மீளாத அடிமைச் சகதியிலும், அறியாமைப் பள்ளத்திலும் வீழ்ந்து கிடக்கின்றது. இவ்வினத்தின் அரசியல், குமுகாய, வரலாற்றுண்மைகள் தலைகீழாகப் புரட்டப் பெற்றுள்ளன. இந்நிலையை அடியோடு மாற்றியமைக்கவல்ல மனவுரனும், மதிநுட்பமும், கொள்கை மதுகையும் கொண்ட ஒரு சிலரை, உண்மைத் தமிழ் மக்களில் சிலர் இருகையேந்தி வரவேற்க முற்பட்டுள்ளனரேனும், போலிமையின்

www.thamizham.net - Free E book No 7427

எழுச்சியாலும், கவர்ச்சியாலும் ஈர்க்கப்பெற்ற பெரும்பாலான மக்களோவெனின், தங்களை உய்விக்கவல்ல உண்மையறிஞர்களை இனங்கண்டு கொள்ளவும் இயலாது தத்தளித்துத் தடுமாறி நிற்கின்றனர். கல்லாக் களிமாந்தரிடையில் சொல்லாரவாரமிக்க புல்லிய அறிவினர் தம் கைச் சரக்குகளே விலையாகி வருகின்றன. கழுத்தசைப்பும், கையசைப்பும், கனைப்பொலிகளும் மிகுமாறு, இழுத்திழுத்துப் பேசும் எக்கலிப்பும் கொக்கரிப்புமே, பழுத்து முதிர்ந்த பேரறிவாளனுக்குரிய காட்சியிலக்கணமாகக் கொள்ளப் பெறுகின்றன. புல்லென மிடையும் சொல்லடுக்குகளும், பொருட்புரைகளுமே அவனுக்குரிய எழுத்திலக்கணமாக மதிக்கப் பெறுகின்றன. இலக்கிய இலக்கண நூற்பயிற்சியும், அறிவியல், வரலாற்றுக் கொண்முடிபுகளும் பற்றி ஒன்று—தானும் உணராத ஒருவன், அரசியல் அதிகாரம் பெறுமளவில், எல்லாம் உணர்ந்த பேரறிஞனாக—யாவரினும் மேலோனாக—வேந்தனாக—இறைவனாக மதிக்கப்பெறும் அவலமிக்கதோர் இழி நிலை இத்தமிழகத்தைத் தவிர உலகில் வேறெங்கணும் காணுதல் அருமையினும் அருமை. புல்லறிவு மிக்க அவ் விழிநிலையோர் இங்ஙன் இருப்ப, ஓரளவு கற்றுப் புலன்வாய்ந்த சிலரோவெனின், ஊமைக்கு உளறுவாய் மேலென்பது போலவும். முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ் தன்னை இந்திரனாய் எண்ணிவிடுவது போலவும், கல்விக் கதிகாரியாகவும், என்றைக்கும் எத்துறைக்கும் கருத்தாளியாகவும் தம்மைக் கருதிக் கொண்டு, செருக்குத் தேர் ஏறி, முறுக்கொடு உலாவரத் தொடங்குவாராயினர். இவ்வாறின்றி, உண்மைக்கே கையெடுப்பாரும், உள்ளத்திற்கே தலைதாழ்த்துவாரும், நேர்மைக்கே நடையிடுவாரும், ஒரு துறை அறிஞராயினும், பல்துறைப் பேரறிஞராயினும், அடுக்குநரும், அடுத்தொன்று கொடுக்குநரும், கொடுத்துமேல் எடுக்குநருமின்றித் தாம் கற்றவெல்லாம் இந்நாட்டு மக்கட்கும், இவ்வுலக மாந்தர்க்கும் எள்ளளவும் பயன் படாமற் போகும்படி, ஊரின் ஒருபுறத்தே ஒதுங்கியிருந்து வாழவேண்டியவராய் உள்ளனர்.

2. பாவாணர் என்பவர் யார்? அவர் தகுதி என்ன?

அத்தகையாருள் ஒருவராயும் பேரறிஞர்க்குப் பேரறிஞராயும், தமிழகத்தின் நான்காயிரமாண்டு வரலாற்றுக் கால நீட்சியில் ஒரேயோர் அமிழாத அறிவுக் கதிரவனாயும், இன்றும் நம்மிடையில், நம் நிலத்தில் வாழ்ந்து வருபவரே மொழி முதறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள். இன்றைக்கு முப்பத்தைந்தாண்டுகட்கு முன் அவரெழுதிய ஒப்பியன் மொழி நூல் ஒன்றே அவருடைய இலக்கண இலக்கியப் பேரறிவையும், முட்டறத்துலங்கிய

www.thamizham.net - Free E book No 7427

மொழிநூற் புலமையையும், உலக வரலாற்றறிவையும், நிலநூல், உயிர்நூல், மாந்த நூல் தேர்ச்சியினையும் நன்கு புலப்படுத்திக் காட்டும். அதன் பின்னர் நீண்ட காலம் டர்ந்து ஆராய்ந்ததன் விளைவாகவும், இயற்கையாகவே அவருக்குள்ள அஃகியகன்ற நுண்ணறிவின் பயனாகவும், வெளிப் போந்த முதல் தாய்மொழி, திரவிடத் தாய், பழந்தமிழாட்சி, தமிழ் வரலாறு, வடமொழி வரலாறு, பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், வண்ணனை மொழிநூலின் வழுவியல், The Primary classical Language of the world, திருக்குறள் தமிழ் மரபுரை முதலிய இருபதின் மேற்பட்ட நூற்களோ, பல்லாயிரமாண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழ்மொழியையும், தமிழினத்தையும் மீட்கவல்ல படைக்கருவிகளும், வரலாற்றுப் பட்டயங்களுமாகும். அயராத அவரின் விடாமுயற்சிக்கும், பேருழைப்பிற்கும், 'சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர் கேடு' என்று தமிழிலும், 'A critical survey of the Madras Univercity Tamil Lexicon' என்று ஆங்கிலத்திலும் அவர் வெளியிட்ட நூலே சான்றாகும். நான்கு இலக்கத்துப் பத்தாயிரத்து நூறு உருபாச் செலவில், இருபத்தேழு ஆண்டுகள், சென்னைப் பல்கலைக் கழகத்தால் ஆறு மடலங்களாக (Vols.) தொகுக்கப் பெற்றதும், நான்காயிரத்து முந்நூற்று ஐம்பத்தொரு பக்கங்களைக் கொண்டதுமான, அவ்வகர்முதலி முழுவதையும், அதைத் தொகுத்த நூற்றுக் கணக்கான பேராசிரியர்களுள் ஒருவரேனும், தாம்தாம் தொகுத்தளித்த ஒரு சில பக்கங்களைத் தவிர, படித்தோ பார்த்தோ இருப்பாரா என்பது ஐயமே! ஏனெனில் பல்துறைச் சொற்களும், விளக்கங்களும் விரவி வரும் அப்பேரகரமுதலியை ஒருங்குசேரப் படிப்பதோ பார்ப்பதோ மிகவும் அரிய செயலாகும். அத்தகைய பேரகரமுதலியை முதலிருந்து இறுதிவரை முழுவதும் படித்ததோடமையாது, அவ் வாறு மடலங்களிலும் உள்ள பிழைகளைச் சொல் வழுக்கள், பொருள் வழுக்கள், வேர் வழுக்கள், இலக்கண வழுக்கள், மரபு வழுக்கள், அகராதி யமைப்பு வழுக்கள், அகராதியாசிரியர் குறைகள், பல்கலைக் கழக அமைப்புக் குறைகள் ஆகிய தலைப்புகளில் நிரல்பெற எடுத்துக்காட்டிய மதுகை பாவாணரைத் தவிர வேறெவர்க்கும் வாய்த்துள்ளதாகக் கருதுதற்கு இடமில்லை. இச்செயல் பிறர் எண்ணியும் பார்க்க வியலாததோர் அருஞ்செயலாகும். இவ்வருஞ் செயலே ஓர் அகரமுதலித் தொகுப்பாசிரியர்க்கு வேண்டிய முதல் தகுதியாகும். பாவாணர்க்கு இத் தகுதி அளவிறந்து காணப்படுவதுடன், அவர்க்குள்ள பன்மொழி இலக்கண அறிவும், ஆராய்ச்சியும், சொன்மூலம் வேர் மூலம் காணும் கூரிய மெய்யறிவுத் திறனும், தமிழ்மொழியைத் திரவிட மொழிகளோடு ஒப்

www.thamizham.net - Free E book No 7427

பிட்டுக் காண்பது போலவே, பிற உலக மொழிகளோடும் ஒப்பிட்டு உயர்வு, சிறப்புக்காணும் பேராற்றலும், எருதந்துறைப்(Oxford) பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள மூவாயிர உருபா விலை மதிப்புள்ள பேரகர முதலியையே கிண்டிக் கிளறி எடை காணும் பேரறிவும் அவர்க்கு இயற்கையிலேயே வாய்ந்த அரும்பெருங் கொடைகளாகும். ஆனால் பெறற்கரிய பாவாணரைப் பெற்ற தமிழகம் அவரைப் பேணிக் கொள்ள வேண்டாவா? மேலும், தமிழ் மொழியில் இனி வேறொரு பாவாணர் பிறப்பாரா என்று வியப்புவினா வெழுப்பும் அளவிற்கு, அவர் செய்யவிருக்கும் பெருஞ்செயல் வேறொன்றும் உண்டு. அதுவே தமிழ் மொழிக்கு இதுவரை எழுதப்பெறாத **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியை** எழுதுவதாகும். இவ்வகரமுதலி எத்தகையது என்பதை அறிந்தால், பாவாணரைத் தவிர, வேறு எவராலும் அத் தகையதோர் அகரமுதலியைத் தொகுத்தளித்தல் இயலாது என்பதை எளிதே உணர்ந்து கொள்ளலாம்.

ஒரு மொழியின் பெருமைக்கும் வலிமைக்கும் மிக இன்றியமையா தது **அகரமுதலி** யென்னும் **சொற்களஞ்சியமே**. ஒரு மொழிக்கண் பயின்றுவருஞ் சொற்களையும்.வழக்கிறந்த அருஞ்சொற்களையும்,அவை வெவ்வேறிடத்து, வெவ்வேறு காலத்து வெவ்வேறு வகையில் பொருள்பெற்று வழங்கும் முறையினையும், ஒருசேரத் தொகுத்து,அகர வரிசைப்படி அமைத்துக் காட்டுவதே **அகரமுதலி** எனப்பெறும். இனி, அச்சொற்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாய் அகர வரிசைப்படி எடுத்தெழுதி, அவற்றின் சொல்மூலங்களையும், சொற்களுக்கான வேர் மூலங்களையும், அவ்வேரடியாய்ப் பிறந்த பல்வேறு சொற்களையும், அச்சொற்கள் யாதானும் ஒருவகையில் மூலப்பொருளை உட்கொண்டு விளங்குவதையும், பல்வேறு பொருள்களையும் விளக்க வந்த விடத்து அச்சொற்கள் மூவகைத் திரிபுற்று வழங்கும் பல்வேறு வடிவங்களை யும், அவை தமிழுக்கினமான மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு முதலிய திரவிட மொழிகளிலும், தமிழுக்கயலான கிரேக்கம், இலத் தீனம், பாரசிகம், சாக்சானியம், சமற்கிருதம் முதலிய உலக மொழி களிலும் சென்று மாறுபட்ட வடிவொடும், ஒலிப்பொடும் பயின்று வருத லையும், அவ்வாறு பயிலப்பெறும் வடிவங்கள் பிறமொழியாளர்களால் பிரித்துணரப் பெறாமல் பிறழவுணரப் பெறுகின்றமையையும், சொற் பிறப்பியல் முறை (Etymological order), வரலாற்றுமுறை அல் லது காலமுறை (Historical or chronological order), ஏரண முறை (Logical order) ஆகியவற்றின்படி, மொழியியலறிஞரும், மாந்தநூலறிஞரும், உயிர் நூலறிஞரும், நிலநூலறிஞரும், வரலாற்றிய லறிஞரும் ஒப்புமாறு, தமிழ்மொழியின் நூல்வழக்கிலும், பேச்சுவழக்கி

www.thamizham.net - Free E book No 7427

லும், ஊர்வழக்கிலும், மலைவாழ்நர், சிற்றூர் வாழ்நர்; ஆரியரால் கீழ்ப் பட்டாரெனா ஒதுக்கப் பெற்று வாழும் தொன்தமிழ்க் குடிமக்கள் வழக்கி லும் பயில்கின்ற பல்லிலக்கம் சொற்களைக் கொண்டு தொகுக்கப் பெறும் அகர முதலியே **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி** ஆகும். இந்நூலின்கண் இதுவரை வெளி வந்த சிறியனவும், பெரியனவுமான அனைத்துத் தமிழ் அகரமுதலிகளிலும் உள்ள எல்லாச் சொற்களும் மேற்காட் டிய முறையில் அடக்கப்பெறுவதுடன், இன்னும் எந்த அகரமுதலியினும் வராது, வாய் வழக்காகவே உள்ள பல்லாயிரக் கணக்கான சொற்களும் ஆங்காங்கே சென்று திரட்டிச் சேர்க்கப் பெறும்.

3. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி என்பது என்ன?

ஆரியர் இந்நாட்டிற் குடியேறிய காலத்தில் அவர்தம் பழக்க வழக்கங்களையும், பேச்சுவழக்கன்றி எழுத்து வழக்காய் அவர் வழங் கிய வேத ஆரிய மொழியையும் ஏற்றுக்கொண்டு, அவர் வருண அடிப்படையில் அமைத்த குலமுறைகளுக்கும், வேத, புராண, இதிகாச முறையில் அவரமைத்த ஒழுகலாறுகளுக்கும் உடன்பட்டு நடந்து, தம்மை, அவர் நீங்கிய சத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற பாகுபாடு களில் ஏதேனும் ஒன்றினுள் அடக்கிக்கொண்டு வாழ்தற்கு உடன்பட்ட தமிழர் போக, அவரையும், அவர் அமைத்த குமுகாய அமைப்புகளை யும் ஒப்பாத தூய பழந்தமிழர் அனைவரையும், 'பஞ்சமர்' என்றும் 'தாழ்த்தப்பட்டவர், என்றும், ஊர்ப்புறஞ் சேரிகளிலும், இடுகாடு, சுடு காடுகளிலும் ஒதுங்கியிருந்து வாழச் செய்தனர், அவர் பன்னெடுங் காலம் தனித்திருந்தே வாழ்ந்தமையின், அவர்பால் ஆரிய, அரேபிய, ஆங்கிலக் கலப்பற்ற தூய தமிழே வழங்கி வந்ததோடு, பல்லாயிரக் கணக்கான செந்தமிழ்ச் சொற்களும் அழியாது நிலைத்திருந்தன. அவை ஏற்கனவே பாவாணர் அவர்களால் ஒருவாறு தொகுக்கப் பெற்றுள் ளனவேனும், பெரும்பகுதிச் சொற்கள் இனியும் முயன்று தொகுக்கப் பெறவேண்டியும், அவற்றை அவர் தொகுக்க விருக்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலியுள் சேர்க்க வேண்டியும் உள்ளன.

இக்கால் உள்ள அகரமுதலிகள், பழைய நிகண்டுகள் எனப் படுபவை யாவும், சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் தலை யெடுக்காத காலத்திலும், உயர்தனிச் செம்மொழியாகிய நந்தமிழ் மொழி முற்காலத்தே வேத ஆரியத்தாலும், பிற்காலத்தே போர்த்துக் கீசியம், அரேபியம், பிரஞ்சியம், டச்சியம், ஆங்கிலம், உருது, இந்தி முதலிய கீழை,மேலை ஆரிய மொழிகளாலும் சிதைக்கப்பெற்றும், உரு மாற்றப்பெற்றும் நின்றதோடு, தமிழனும், தமிழ்நாடும் அடிமைப்பட்டு நின்ற காலத்திலும், தமிழ்ப்பற்றில்லாத ஆரியர்களாலும் அவர்தம்

www.thamizham.net - Free E book No 7427

அடிமைகளாலும், தொகுக்கப்பெற்றுக் கலப்புத் தமிழில் விளங்குவனவாம். அவற்றுள் காணப்பெறும் சொற்களில் நூற்றுக்கு முப்பது வேற்றுமொழிச்சொற்களாய் இருப்பதோடன்றித், தமிழ்ச் சொற்களாகவுள்ள பிறவும் தூய வடிவமிழந்து, சிதைப்புண்டும், முன்பின் வேற்றுமொழி ஒட்டுகளைப் பெற்றும் உள்ளன. அகரமுதலிக்கலை முற்றும் உணரப்பெறாத காலத்தில் அவை தொகுக்கப்பெற்றன வாகலின், அவற்றுள் ஒரு பொருளுடைய சொற்கள் பலவிடத்துச் சிதறியும், பல பொருளுடைய நுண் சொற்கள் ஒன்றுபோல்வனவாயும், மயக்குடைய சொற்கள் போதிய விளக்கமின்றியும் காணப்பெறுகின்றன. மேலும், அவற்றுள், தமிழ்மொழிக்கண் பண்டையில் இருந்து அழிந்தோ அழிக்கப்பெற்றோ மறைந்தொழிந்த எண்ணற்ற நூற்கள் போக, எஞ்சியவற்றுள் உள்ள அனைத்துச் சொற்களும் சேர்க்கப் பெறாமையோடு, பேச்சு வழக்கில் காணப்பெறும் ஆயிரக்கணக்கான அருந்தமிழ்ச் சொற்களும் தேடிச் சேர்க்கப்பெறவில்லை. எனவே,இவ் வகரமுதலிகள் யாவும் ஆங்கில மொழியில் உள்ள அகரமுதலிகள் போல் தமிழ்மொழிக்குப் பயனோ சிறப்போ விளைவிப்பன வல்ல; மாறாக,இழிவையே தருவன. சென்னைப் பல்கலைக் கழகத்தால் 4,10,100 உருபாச் செலவில் 27-ஆண்டுகள் முயன்று 4351 பக்க அளவில் வெளியிடப்பெற்ற அகரமுதலியே, செவ்வையாய்த் தொகுக்கப் பெறாமற் போனதோடு, பிழை மலியவும்; உலகமொழிகள் எல்லாவற்றையும் படிப்படியாய்த் தோற்றுவித்ததும், தனித்தன்மையும் தாய்மையும் பூண்டு விளங்குவதுமான தமிழ்மொழி, வடமொழியின் கிளைமொழியாகியதொரு கலவைமொழி என்று கருதப்படுமாறும் தொகுக்கப் பெற்றுள்ளதெனில், பிற அகரமுதலிகள் பற்றிப் பேசுதலும் வேண்டுமோ? அதுவுமின்றி, இக்கால் உள்ளன யாவும் வெறும் சொல்லியல் அகரமுதலி (Dictionary) களே ஆகும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி(Etymological Dictionary)யோ வென்னின், தமிழ்மொழியின், தொன்மை, முன்மை; எண்மை (எளிமை), ஒண்மை (ஒளிமை); இளமை, வளமை; தாய்மை, தூய்மை; செம்மை, மும்மை; இனிமை, தனிமை; பெருமை, திருமை; இயன்மை, வியன்மை முதலிய பல்வகைச் சிறப்புகளையும் எண்பித்துக் காட்டும் கருத்தாணை பொருந்தியதோர் அகரமுதலியாக விளங்கும். நூல் வழக்கிலும், பேச்சு வழக்கிலும் உள்ள அனைத்துத் தமிழ்ச் சொற்களும் செவ்வையாய்த் திரட்டப் பெற்று, இதில் தொகுக்கப் பெறுவதுடன், கீழை மேலை ஆரிய மொழியினங்கள் அனைத்திலும்

4. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி தமிழ்மொழிக்கு எவ்வகையில் இன்றியமையாதது?

www.thamizham.net - Free E book No 7427

சென்று மருவியும் மருவாமலும் வழங்கிவரும் மூலச் சொற்கள் யாவும் பொருள் விளக்கத்துடன் காட்டப்பெறும். மேலும், மொழி நூல் துறையில் நம் நாட்டு அரைகுறைப் பேராசிரியர்களும், இவர்களை யொட்டித் தமிழ் மொழியை ஆய்ந்துவரும் பரோ, எமினோ போன்ற ஆங்கில, அமெரிக்கப் பேராசிரியர்களும், இதுவரை தமிழ் மொழியைப் பற்றிப் பிறழ உணர்ந்து அறிவித்துள்ள கருத்துகள் யாவும் இவ்வகர முதலியால் முறியடிக்கப் பெறுவதுடன், அவர்களுக்குத் தமிழைப் பற்றிய முழு அறிவையும் ஊட்டுவதாக இஃது அமையும். மொத்தத்தில் தமிழ் மொழிக்குள்ள சில இழிவுரைகளும் பழியுரைகளும் இவ்வகர முதலி வெளிவந்தபின், தாமே வலிவிழந்து சிதைந்து போகும். சுருங் கச் சொல்லுமிடத்து, இவ்வகர முதலிக்குப் பின்னுன், தமிழ் உலக மெலாம் பரவித் தழைத்தோங்கும் நிலையைப் பெறும். ஒரு சோற்றுப் பதமாய் இதன் சிறப்பைக் கூறவேண்டுமானுல், இதிற் காட்டப்பெறும் சொற்கள் அனைத்தும் தூய தனித் தமிழ்ச் சொற்களாகவும், இதிற் காட்டப் பெருதவை அனைத்தும் பிற மொழிச் சொற்களாகவுமே இருக்குமெனக் கருதிக் கொள்ளலாம். எனவே, இப் பேரகரமுதலி தமிழ் மொழிக்கு எல்லா வகையாலும் அரண் சேர்க்கும் ஒன்று அமையுமென்பதையும், தமிழின் பெருமைக்கும் நிலைப்புக்கும் இஃது இன்றியமையாதது என் பதையும் தெற்றெனத் தெளிந்து கொள்க.

இனி,இத்தகைய அருமை மிக்கதும் தமிழுக்கே பெருமை தருவது மான அகரமுதலியைத் தொகுப்பதற்கு எத்துணை முயற்சியும் பொருட்செலவும், அறிவுழைப்பும், தேவைப்படும் என்பதை அறி வுடையார் எண்ணிப் பார்க்கக் கேட்டுக்கொள்கின்றேன். அகரமுதலி தொகுப்பதென்பதே ஒரு தனிக்கலை. நூல் எழுதுவது போன்று இடையீடின்றித் தொடர்ந்து செய்யப்பெறும் ஒரு வினையன்று. அது வும், சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பென்பது,மிகவும் இடர்ப் பாடும், சிக்கலும், மிகுந்த அறிவுழைப்பும் வாய்ந்த ஒரு பெருமுயற்சி யாகும். பன்னூருண்டுகளாய்த் தமிழகத்துப் பல்வேறு இனத்தவரும் பல்வேறு அரசும் புகுந்து,மொழியையும் மக்களையும், நாட்டையும் அடிமைப் படுத்தி, இங்குள்ள எல்லாவகைத் தனி மச் சிறப்பையும் குலைத்தும், குழப்பியும் விட்டிருப்பதால், தமிழ்ச் சொற்கள் பெரும்பாலும் சிதைந்தும், திரைந்தும், மருவியும், மாறியும் சொல்லாராய்ச்சி மிக்கவராலன்றிப் பிறரால் எளிதே சொல்லடையாளமும் பொருளடை

5. சொற்பியப்பியல் அகரமுதலியைத் தொகுப் பதற்குரிய முயற்சி எத்தகைய தென்பதும், அதனை வெளியிடுவதற்குரிய செலவு எவ்வளவினது என்பதும்.

www.thamizham.net - Free E book No 7427

யாளரும் கண்டுகொள்ளமுடியாதவாறு வழங்கிவருகின்றன. இவற்றை முறைப்படத் தொகுப்பதும், தொகுத்த சொற்களுக்குரிய வேர்களையும் வேர்ப்பொருளையும் நுண்மாண் நுழைபுலங்கண்டு அறிவதும், அவற்றின் வரலாற்றை ஆய்ந்து உணர்வதும், அவை பிறமொழிகளில் சென்று வழங்கிய முறையினையும் காலத்தையும் ஓர்ந்து தெளிவதும் எல்லாருக்கும் கைவருவதும், எளிய முயற்சியில் இயல்வதுமான செயல்கள் அல்ல. ஒரு சொல்லுக்காகத் தமிழகம் முழுவதிலுமுள்ள ஊர்கள் அனைத்தையும் சுற்றவேண்டி வந்தாலுமோ, நூலகத்தில் உள்ள நூல்களில் சிறந்தன அனைத்தையும் தேடவேண்டி வந்தாலுமோ வியப்பதற்கில்லை. சில ஐயங்களைத் தீர்வு செய்வதற்குத் தமிழகத்தின் மிகப் பழங்குடிகளும் மலைவாழ்நருமான நீலமலைத்தொதுவர், தோடர், குடகுமலைத் துளுவர், நாகமலை நாகர் முதலியோரை நோக்கியோ, அல்லது அவர்களைப்பற்றியும் அவர்கள் மொழியைப் பற்றியும் மேனாட்டினர் ஆராய்ந்து வெளியிட்டிருக்கும் நூல்களைத் தேடியோ போக வேண்டியிருக்கும். இம் முயற்சிகளுக்கெல்லாம் உடலுழைப்பும், பொருளுதவியும், ஆள்துணையும் நிறைய வேண்டியிருக்கும். பொதுவாக இதுபோன்றதொரு வினைப்பாட்டை ஒரு பல்கலைக் கழகமோ, பேரறிஞர் பலர் கொண்ட ஒரு குழுவோதான் செய்தற்கியலும். ஆனால் நந்தமிழகத்தில் உள்ள மூன்று பல்கலைக் கழகங்களில் அண்ணாமலைப் பல்கலைக் கழகமோ தனியார்க்குச்சொந்தமானதும், தனியார் மேற்பார்வையில் இயங்குவதுமான ஒன்றும். சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களே தமிழக அரசுக்குச் சொந்தமானவையும், அதன் மேற்பார்வையில் இயங்குவனவுமாம். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தனித்து இயங்குவதானாலும், ஆண்டுதோறும் நடுவணரசிடமிருந்து ஒரு பெருந்தொகையை நல்கையாகப் பெற்று இயங்குவது. அதில் உள்ள திரவிடமொழியாராய்ச்சிப் பிரிவிற்கு வங்காளத்துப் பிராமணரான பர். சுனித்குமார் சட்டர்சி என்பவரே தலைவராக இருந்து வருகின்றார். இவ்விடத்தில் தமிழன்பர் ஒன்றை மறந்து விடுதல் கூடாது. ஆரியப் பார்ப்பனரான பிராமணர் இந்தியாவின் எப்பகுதியைச் சார்ந்தவராயினும், எவ்வளவு கற்றவராயினும் சமற்கிருத மொழியே மூலமொழியென்றும்; தமிழ் உள்ளிட்ட பிற இந்திய மொழிகள் யாவும் அதனின்று பிறந்த சேய்மொழிகளே என்றும் தலைமாற்றிக் கருத்துக் கொண்டவர்களும், அதைத் தமக்குற்ற எல்லாவகையான விளம்பர வாய்ப்புகளாலும் மேனாட்டினரும் நம்பும் அளவிற்குப் பொருந்தப் புளுகி வருபவர்களுமே யாவர் என்பதை

www.thamizham.net - Free E book No 7427

நினைவில் வைத்தல் வேண்டும். இவர்களை அடியொட்டியே நம் தமிழ்ப் பேராசிரியர்கள் எனப்படுவார் பலரும், தாம் பெற்றுவரும் பல்வகை வாழ்வு நலன்களில் மண்ணைக் கொட்டிகொள்ள வேண்டி வருமே என்ற அச்சத்தாலும், தமக்குற்ற எளிய ஆராய்ச்சித்திறனால் அக்கருத்தை மறுத்துரைக்கும் மதுகையின்மையாலும், அதனையே நம்பியும், பரப்பியும் வருகின்றனர் என்பதையும், மெய்ம்மைத் தமிழன் பர்கள் நினைவில் இறுத்திக்கொள்ளல் வேண்டும். எனவே, பாவாணர் போலும், தந்நலமும் அடிமைத்தனமுமற்ற சீரிய ஆராய்ச்சியாளர் தாம் கூறும் கருத்தைப் பரப்பவும், அதனை மேனாட்டினரும் நன் குணர்ந்து தெளியுமாறு நூலியற்றவும், வாய்ப்பின்றிப் புழுங்கிக் கிடக்க வேண்டியுள்ளது.

எனவே, இத்தகையதோர் அரிய முயற்சிக்கு அரசே துணை யாதல் வேண்டும். இப்பொழுதுள்ள தமிழக அரசுக்கு முந்தியிருந்த பேராயக்கட்சியின் ஆட்சி, தமிழுக்கு எவ்வகையாலும் துணைபோகும் அரசாக என்றும் இருந்ததில்லை. அது தமிழ்மொழி முன்னேற்றத்தில் என்றும் கவனம் செலுத்தியதில்லை. அதுவுமன்றி, நம் தமிழ்மொழி தனித்தியங்க வல்லதென்பதிலும்; அஃது ஒருகால் பிறமொழிக் கலப் பேதுமின்றித் தூய்மையுற்று வழக்கிலிருந்த தென்பதிலும்; அதனைச் சமற்கிருதம் அடிமைகொண்ட தென்பதிலும்; தமிழர் உலகில் உள்ள மாந்தர் யாவரினும் மேம்பாடுற்றிருந்தவர் என்பதிலும்; அவர் நாக ரிகம் உலகம் முழுவதும் போற்றிப் புரக்கப்பெற்ற தென்பதிலும்; பேராயக் கட்சியினர் நம்பிக்கையே கொள்ளவில்லை. காரணியம், அதன் தலை வர்கள் எல்லாரும் வடநாட்டினராகவோ, ஆரியப் பார்ப்பனராகவோ இருந்தமை தான். எனவே, அவர்தம் மனம் நோகு மாறு தமிழின் அல்லது தமிழரின் அல் லது தமிழ்நாட்டின் எந்தத் தனிவரலாற்றையும் ஏற்றுக்கொள்ள இவர் -கள் இசைந்துவிட வில்லை. மேலும், பேராயக்கட்சியிலிருந்த அல்லது இருக்கும் தமிழகத் தலைவர்களோ மொழியறிவற்றவர்களாகவும், தாய் மொழிப் பற்றற்றவர்களாகவும், வரலாற்றறிவில்லாதவர்களாகவுமே இருந்தனர் அல்லது இருக்கின்றனர். அவர்களில் சிலர் தமிழ் மொழி யின் நலம்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டியிருந்த சிற்சில பொழுது களிலும், பர். சட்டர்சி போன்ற வடநாட்டுப் பிராமண அறிஞர் களும், அவர்தம் அடிமையர்களாக விருந்த திரு. வையாபுரி(ப்பிள்ளை),

6. இவ்வகரமுதலிக்குப் பல்கலைக் கழகங்களும், முன்னைய அரசும் துணை நிற்க முன்வராதது ஏன்?

www.thamizham.net - Free E book No 7427

திரு. இரா. பி. சேது(ப்பிள்ளை) முதலியோரும் சொல்வதை இறைக்கூற்றாக எடுத்துக் கொண்டனரே யன்றித், தனித்தமிழ்த் தந்தை மறைமலை யடிகளார், மொழிமுதறிஞர் தேவநேயப் பாவாணர் ஆகியோர் கருத்தை அறவே புறக்கணித்தே வந்தனர். மேலும், இந்திய ஒற்றுமை என்னும் போலிக் கொள்கையில் முற்றும் ஊறியிருந்த இவர்கள், இந்திமொழியைத் தமிழகத்தில் புகுத்துவதையே, தாம் வடவரிடம் வாங்கித் தின்னும் கைசோற்றுக்குக் கடமையாகக் கருதி னரேயன்றித் தமிழ் முன்னேற்றத்தைப் பற்றிக் கடுகளவேனும் கருத் துக்கொள்ள வில்லை. அதுவுமன்றி, திரு. முத்தையா(ச்செட்டியா)ரின் தமிழ் உள்ளத்தால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், மொழியாய் வுத்துறையில் அமர்த்தப் பெற்றிருந்த பாவாணரை, திரு சுனித் குமார் சட்டர்சி, திரு.சேது(ப்பிள்ளை) அவர்களின் திருகுதாளக் கூற் றைக்கொண்டு விலக்கவும் செய்தனர். அவ்வாறு அவரை விலக்கா விடில் நடுவணரசின் நல்கைத் தொகை கொடுக்கப்பெறாமலும் போக லாம் என்று அச்சுறுத்தி, அவர்களின் கருத்துக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை இசைய வைத்தனர். ஓர் உண்மையான கொள்கையை நிலைநாட்டுவதற்காக மெய்யாசிரியர் ஒருவர் எவ்வளவு அரும்பாடுபட வேண்டியுள்ளது என்பதைத் தமிழ்மக்கள் எண்ணிப் பார்க்கவேண்டியே இதனை இங்குக் குறிப்பிடுகின்றேன். இரண்டு பல்கலைக் கழகங்களையும் தம் சொந்தப் பொறுப்பில் வைத்துக் கொண்டுள்ள ஓர் அரசு, மொழியாராய்ச்சித் துறையில் அறிஞர் கண்ட உண்மைகளையே இத்துணைக் கரவோடு மறைத்துவிடுமானால், இந்த நாட்டில் அறிவு எப்படி வளரும் என்பதையும்; நூற்றுக்கணக் கான ஆண்டுகளாய் அடிமைப் பட்டுக்கிடந்த இந்நாட்டு மக்கள் உரிமை உணர்ச்சி பெறுவது யாங்ஙன் என்பதையும் அறிஞர் எண் ணிப் பார்ப்பாராக!

இனி, இற்றைக்கு அரசுக் கட்டிலேறிய திராவிட முன்னேற்றக் கழக அரசும் பாவாணர் தொகுக்க விருக்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியைப்பற்றி எள்ளளவேனும் கருத்துச் செலுத்தவில்லை என்றே வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியுள்ளது. பேராயக் கட்சி, என்றும் தன்னைத் தமிழுக்குத் துணை நிற்கும் கட்சியாக அறிமுகப் படுத்திக்கொண்டதில்லை. மாறாக, தான் இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்குமே பாடுபடப் போவதாகவும், எனவே இந்தி மொழியையே அனைத்திந்திய ஆட்சி மொழியாகத் தான் ஏற்றுக்

www.thamizham.net - Free E book No 7427

கொண்டதாகவுமே பேசியது; செய்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகமோ ஆட்சியைக் கைப்பற்றும் முன்னும், கைப்பற்றிய பின்னும், தான் தமிழ் மொழியின் முன்னேற்றத்தில் முழுக் கவனமும் செலுத்தப்பாடுபடுவதாகப் பறை சாற்றியது. பேராயக் கட்சி மொழித் துறையில் செய்யத் தவறிய ஆக்கங்களைத் தான் செய்து முடிக்கப் போவதாகத் தேர்தல் மேடைகள் தோறும் முழங்கியது. அதுவுமன்றி, இந்தியைத் தான் ஒருபோதும் ஆட்சிமொழியாக ஏற்கப் போவதில்லை யென்றும், இருமொழிக் கொள்கையையே தன் கட்சி என்றும் கடைப்பிடிக்கும் என்றும் உறுதி கூறியது. அதன் முடிவாகவே 67-க்கு முன்பிருந்த பேராயக்கட்சியைத் தேர்தலில் வென்று வாகை சூடியது; சட்டமன்றத்தில் தானே பெரும்பான்மை பெற்றுத் தன் காலிலேயே நின்றது. ஆட்சிக்கு வந்தபின், தான் உறுதியளித்ததற்கேற்ப ஓரிரு செயல்களையும் தமிழுக்காகச் செய்தது. மூவேந்தர் வீழ்ச்சிக்குப் பின்னும், மாற்றார் ஆட்சிக் காலத்தும், அரசியல் வரலாற்றில் எங்கணுமே தமிழின் பெயரால் சுட்டி அழைக்கப்பெறாத இத் தமிழ் வழங்கும் நிலத்தை 'தமிழ் நாடு' என அழைக்கும்படி, சட்டத்திருத்தம் செய்தது. திருவள்ளுவரின் குறள்மொழிகளை மக்கள் உணருமாறு அலுவலகங்களிலும், உந்து வண்டிகளிலும் பொறிக்கச் செய்து மகிழ்ந்தது. இந்தி மொழி பயிற்றுவது அறவே முடியாதென நடுவணரசுக்கு அறிவித்தது. அத்துடன் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழே பயிற்றுமொழி யென்றும், துணிவொடு பல ஏற்பாடுகளைச் செய்தது. இத்தகைய முன்னோடியான மொழித்துறை யாக்கங்களைச் செய்ததுடன், குமுகாயத் துறையிலும் அரிய பல மாற்றங்களை, ஆரியப்பார்ப்பனர்தம் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது, மிகவும் துணிவுடனும் முனைப்புடனும் செய்தது.

7. தி. மு. க. அரசு அகரமுதலித் தொகுப்பில் ஏதேனும் அக்கறை காட்டிற்று?

இவையன்றி, இத்தகைய வினைப்பாடுகளில் இன்னும் கருத்தைச் செலுத்தும் என்று நம்பும்படியும் பலவகைத் திட்டங்களை அது கருத்தில் கொண்டுள்ளது. எனினும், தமிழ் மொழியைப்பற்றி அது செய்த செயல்கள் யாவும், பொது மக்களுக்கு எளிதே புரிவனவும், அவர்களைத் தம்பால் விரைவில் கவர்ந்திழுக்க வல்ல அடிப்படைத் திட்டங்களுமே ஆகும். அப்படிச் செய்வதில் அக்கட்சிக்கு இருந்த நோக்கத்தையும், அதனால் அது பெற விருக்கும் பயனையும் தவறென்று கூற

www.thamizham.net - Free E book No 7427

முடியாது. ஆனால், பொது மக்களை முன் வைத்துச் செய்ய வேண்டிய ஆக்கங்கள் என்பன வேறு; புலமக்களை—அறிஞர்களை முன் வைத்துச் செய்ய வேண்டிய ஆக்கங்கள் என்பன வேறு. என்றும் நிலையாக விருக்க விரும்பும் ஓர் அரசு, இவ்விரு திறத்து மக்களையும் நிறைவு செய்வதில் எந்த அளவில் வெற்றி பெறுகின்றதோ, அந்த அளவில் அதன் நிலைப்பும் உறுதிப்படுகின்றது. இக்கால் அரசேற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஏதோ ஒரு வகையில், பொது மக்களிடம் விளம்பரம் பெற வேண்டியோ, ஒப்போலை பெற வேண்டியோ, மிகவும் கவர்ச்சி தருவனவும், பொது மக்களுக்குத் தற்காலத்தில் மட்டும் நிறைவளிப்பனவும் ஆகிய திட்டங்களில் கருத்துச் செலுத்துவதுபோல், எதிர்காலத்தில் என்றென்றும் நிலைத்திருக்கத்தக்கனவும், பொது மக்கள் அறியாமலேயே அவர் தம் உள்ளங்களை மேம்பாடுறச் செய்யத் தக்கனவும், பன்னூற்றாண்டுக் காலமாய் அடிமைப்படுத்தப் பெற்றிருக்கும் அவர்தம் உள்ளுணர்வுகளைத் தட்டியெழுப்பி, விழிப்புறும்படி செய்யத் தக்கனவுமாகிய செயல் முறைகளில் கவனஞ் செலுத்தாததும், அவற்றைத் தக்க அறிஞர்களைக்கொண்டு செய்விக்க முற்படாததும் ஏன்?

தமிழ் மொழிக்குச் செய்யப் பெறவேண்டிய அடிப்படை வினைப்பாடுகளே ஏராளமாக உள்ளன. தமிழ் மொழியில் இன்னும் முற்றுந் தகுதி வாய்ந்ததும், சிறப்பானதும், வேற்று மொழியறிஞர்கள் பார்த்துப் பின்பற்றத் தக்கதுமான ஒரு சொல்லியல் அகர முதலியே இல்லை. மதுரை இ. மா. கோபாலகிருட்டிண (கோ)ன் அவர்கள் வெளியிட்ட அகர முதலியும், திரு வையாபுரி(ப்பிள்ளை)யவர்களின் தலைமையில் சென்னைப் பல்கலைக் கழகம் தப்புந்தவறுமாய் வெளியிட்ட அகர முதலியுமே, இப்பொழுதுள்ள பேரகர முதலிகள். மதுரை அகர முதலியில் உள்ள பிழைகளைச் சொல்லி முடியாது. ஏதோ, குப்பைத் தொட்டியில் பிறந்த குழந்தையை எடுத்து ஒப்பனை செய்ததுபோல், தமிழ் மொழியை வைத்து நடத்தப்பெற்ற வாணிக வெளியீடு அது. சென்னைப் பல்கலைக் கழகப் பேரகர முதலியோ, தமிழைக் காட்டிக் கொடுப்பான்களையும், நிலையான வல்லடிமைகளையும் கொண்டு செய்வித்ததும், வைக்கோற் கன்றுக்குட்டி போல உயிரற்றதும் ஆகும். இவை வேண்டுமானால் இப்பொழுதுள்ள தி. மு. க. அரசுக்குப் போதுமானவையாக விருக்கலாம். ஆனால், உலக மொழிகளுக்கெல்லாம் மூலமும் முதலும் சான்ற தொல்பெருந் தனிமொழியாகிய தமிழ்

www.thamizham.net - Free E book No 7427

மொழிக்கு இவை கவைக்குதவாக் கழிசடைகளே! தமிழ்மொழியின் வல்லாற்றலை விளங்கிக் கொள்ளாத வீணர்களுக்கும், அவர் கூற்றுக்கு ஒப்பத் தாளம்போடும் அரசியல் அதிகாரக்காரர்களுக்கும் இது சற்று எரிச்சலை மூட்டும் கூற்றுகக் கூட இருக்கும். அதற்காக உண்மையைச் சொல்லாமல் இருக்க முடியாது. உண்மை எல்லாமே உவப்பாக இராது. கசப்பான உண்மைகளையும், எரிச்சல் மூட்டும் உண்மைகளையுங்கூட அரசியலார் சில நேரங்களில் செரித்தாக வேண்டியிருக்கும். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இன்றியமையாத இத்தகைய வினைப்பாடுகளில் கவனமும், கருத்தும், கவலையும் கொள்ளாமல், வேறு ஆரவாரமானவையும், பொது மக்களின் அன்றாடச் சுவைக்குப் போதுமானவையுமாகிய செயல்களில் கவனம் செலுத்துவது, காழ்ப்பேறிய மரத்தில் உயர்வும் உறுதியும் மிக்க கதவொன்றைச் செய்து வைத்து, அதற்குரிய தாழ்ப்பாளைச் செய்யாமல் விட்டது போல் ஆகும்.

பன்னும் பனுவல் பயன்தேர் அறிவிலார்
மன்னும் அறங்கள் வலிவிலவே—நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலிவுடைத்தோ
தாழொன் றிலதாயின் தான்.

—என்பர் சிவப்பிரகாசர்.

இனிச் சொல்லியல் அகரமுதலி தவிர இன்னும் செய்யப் பெற வேண்டிய அடிப்படை ஆக்கங்கள் எவ்வளவோ உள. தெளிவான தமிழக வரலாறு, தமிழின வரலாறு, தமிழக அரசர் வரலாறு, தமிழரின் வாணிக வரலாறு, போன்ற வரலாற்று நூல்கள் தக்க அறிஞர்களைக்கொண்டு யாக்கப் பெறுதல் வேண்டும். இவற்றின் பின் இக்கால அறிவியல் முன்னேற்றத்தை எட்டிப்பிடிக்கும் அளவில் தூய தமிழில் பல்துறை அறிவியல் நூல்களும் செய்யப் பெறுதல் வேண்டும். உலகப் பொதுமைக்கும், பொதுவுடைமைக்கும் அடிகோலுவதான பழந்தமிழ் இலக்கியக் கருத்துகள் தக்க அறிஞர்களைக்கொண்டு மொழி பெயர்க்கச் செய்து உலகம் முழுவதும் பரப்பப் பெறுதல் வேண்டும். ஆனால் இப்பொழுதுள்ள தமிழக அரசு இவற்றில் எள்ளளவேனும் கருத்துச் செலுத்துவதாகப் புலப்படவில்லை. பாவாணரின் சொற்பிறப்பியல் அகரமுதலியின் தேவையை உணர்

www.thamizham.net - Free E book No 7427

வதோ, உணர்ந்து அதனை வெளியிட முயல்வதோ இவ்வரசால் இயலுவ தொன்றாக நாம் கருதவே முடியாது.

இருப்பினும், 'செவிசுடச் சென்று, ஆங்கு இடித்து, அறிவுமூட்டி வெகுளினும் வாய்வெரீஇ, பேரா -எனும் வாய்மொழிக் கிணங்க, 'எடுத்துச் சொல்லா ஒரு குறையினுல்கூட, இவ்வரசு செய்ய முடிந்த தையும் செய்யாமல் விட்டிருக்கலாம்; எனவே எட்டியிருந்து பலவாறு சொல்வதைவிடக் கிட்டிநின்று கேட்போம்' என்று கருதி, பாவாணர் தலைமையில் இயங்கும் உலகத் தமிழ்க் கழகத்தின் பொதுச்செயலா ளன் என்ற முறையில் நானும், பேரா. திரு. சொக்கப்பனுரும் உள் ளடங்கிய ஐவர்கொண்ட ஒரு குழுவாக அமைச்சர்களின்பால் சென்று, பாவாணரின் சொற்பிறப்பியல் அகரமுதலி பற்றியும், தமிழ்மொழிக்கு அதன் இன்றியமையாமை பற்றியும் பல வாறும் விளக்கிச் சொல்லி, ஒரிலக்கம் உருபாயில் ஒரு திட்டத்தையும் கொடுத் தோம். வெறும் திட்டத்தை மட்டும் அவர்கள் புரிந்து கொள்ள முடியாது என்று கருதிப், பாவாணர் அவர்கள் சொற்பிறப்பியல் அகரமுதலி எழுதப்பெறும் முறையில், ஒருசோற் றுப் பதமாக, மூன்று சொற்களுக்கென எழுதிக் கொடுத்த நாற்பது பக்க விளக்கக் கட்டுரையும் அமைச்சர்களிடம் கொடுக்கப்பெற்றது. அதன்பின் சில நினைவூட்டு நிகழ்ச்சிகளும் பரிவுரைகளும் நேர்ந்தன. இறுதியில் 'இல்லை' என்று சொல்லமாட்டாத குறையுடன், அமைச் சர்கள் புறக்கணிப்பாக நடந்து கொள்ளத் தொடங்கிவிட்டனர். இந் நிலையில் மேலும் சிலகாலம் காத்திருக்கப் பாவாணர்க்கு இளமையும் இல்லை; அவர் மாணவனுன எனக்கு முதுமையும் இல்லை.

8. அரசினர்பால் செய்த முயற்சிகளும் அவற்றின் முடிவும்.

தமிழ்மொழியை வளரச்செய்ய வேண்டும்; அதனைத் தூய்மைப் படுத்தி நிலைப்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணம் தி. மு. க. அரசுக்கு உண்மையிலேயே இருக்குமானுல், பாவாணர் போலும் உண்மைத் தமிழ்ப் பேரறிஞர்களைப் போற்றி புரக்கவும், அவர்களைக் கொண்டு தமிழ்மொழிக்கு ஆக்கந்தரும் அரிய நூற்கள் பலவற்றை அவர்கள் காலத்திற்குள்ளேயே எழுதுவிக்கவும் வேண்டும். இச்செயல் -கள் யாவும் எவ்வகைப் பரிந்துரைகளும் வேண்டுதல்களும் இன்றி இயல்பாகவே செய்யப் பெறுதல் வேண்டும். ஆனுல் இவ்வரசோ இதன் அமைச்சர்களோ,அறிஞர்களைப் பற்றியோ அவர்களின் ஆக்கங்களைப்

www.thamizham.net - Free E book No 7427

பற்றியோ கவலை கொள்வதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துக்கொண்டிருந்தால், பொதுமக்களிடையில் ஏற்கனவே தங்களுக்கிருக்கும் கவர்ச்சியில் குறைவு நேர்ந்துவிடுமோ என்ற கலக்கமோ, தம்மால் புரக்கப்பெறும் தண்டமிழ்ப் பேராசிரியர்கள், தங்கள் பெயரும் புகழும் குன்றுமளவிற்கு உயர்ந்து விடுவார்களோ என்ற அச்சமோ காரணியங்களாக விருக்கலாம். உண்மையில் தனித் தமிழும் தூய மொழிப் பற்றும் வளர்ந்துவிடுமானால், இவர்களின் கலப்புத் தமிழும், ஓரளவு தந்நலங் கலந்த மொழிப்பற்றும் பொது மக்களிடையில் கூட எடுபடுவது அரிதாகிவிடும். தப்புந்தவறுமாகக் கலப்புத் தமிழில் இவர்கள் வெளியிட்டுவரும் கிழமை, மாத, நாளிதழ்களும், கதை, இலக்கிய, பாடல் நூல்களும் இன்னும் சில்லாண்டுகளில் மதிப்பிழந்து போவது திண்ணம். அதன்பின் இவர்களின் திரைத் தமிழையும் தெருத் தமிழையும் எவனும் தீண்டிப் பார்க்கவும் மாட்டான். அந்த அளவிற்கு உண்மைத் தமிழுணர்வு மேலோங்கி விடும். அந்நிலையில் இவர்களின் நாவன்மையும், பாவன்மையும் எல்லாரும் எள்ளத் தகுந்த வண்ணம் தாழ்வும் ஆரவாரமும் மிகுந்தவையாக உணரப்பெறும். எனவே அப்படியொரு நிலை தங்கட்கு வாய்ப்பதை இவர்கள் விரும்பாமலிருக்கலாம்; அல்லது அந்த எல்லைக் காலத்தைக் கூடியவரையில் நீட்டிப் போடுவதையேனும் அவர்கள் விரும்பலாம். இக்கருத்தை மெய்ப்பிக்க எத்தனைச் சான்றுகளையும் என்னால் காட்ட முடியும். காலமும் நேரமும் வரும்பொழுது அவற்றையும் வெளிப்படுத்துவேன். ஒன்று மட்டும் உண்மை. முழுஅடிமைக் காலத்திற்கும் முழுஉரிமைக் காலத்திற்கும் இடையில், அடிமையும் உரிமையும் பிரித்துணரப் பெறாத ஒரு காலம் இருப்பது போல, கலப்புத் தமிழுக்கும் தனித்தமிழுக்கும் இடையில் திரவிடத் தமிழ் அரசோச்சும் காலம் இக்காலம் என்பதை எல்லாரும் உணர்தல் வேண்டும். தங்கள் ஒரு சிலரின் தந்நலங் கருதியோ, அல்லது புகழ் கருதியோ, ஒரு மொழிக்கும், ஒரு நாட்டிற்கும், ஓரினத்திற்கும் வாய்க்கவிருக்கும் எல்லையற்ற பெருமைகளை இவர்கள் தடுத்துவிட முயல்வது இவர்களையே அழித்துக் கொள்வது போல்வதாகும்.

9. தி. மு. க. அரசு பாவாணர் போன்றோரைப் புறக்கணிப்பதன் நோக்கம் என்னவாக இருக்கலாம்.

தமிழ் மொழிக்கு இவர்கள் இதுவரை செய்துள்ள ஓரளவு தொண்டை எவரும் மறுக்கவும் இல்லை; மறைக்கவும் விரும்பவில்லை.

www.thamizham.net - Free E book No 7427

ஆனால் அத்தொண்டிற்கு வரையறை எது? இவர்களின் விருப்பமும் அறிவு நிலையுந்தாம் எல்லைக்கோடுகளா? அவற்றைத் தாண்டிச் செல்ல எந்தப் பேராசிரியர்க்கும் உரிமை இல்லையா? அல்லது அந்தப் பேராசிரியர்கள் எல்லாரும் இவர்களின் பொருட்டுத் தங்களுக்குள்ள அறிவெழுச்சியைக் குறைத்துக்கொள்ள வேண்டுமா? ஓரிரு பேராசிரியர்கள் இவர்கள் சொன்னபடியெல்லாம் நடந்து கொள்கின்றார்கள் என்பதற்காக, அவர்களை ஓரிரு பதவிகளில் அமர்த்தி விடுவதனால் மட்டும், தமிழுக்கு இவர்கள் நன்மைசெய்துவிட முடியாது. தமிழுக்குச் செய்ய வேண்டிய உண்மையான ஆக்கங்கள் பலஉள, அவற்றை இவர்களோ, இவர்கள் நம்பியிருக்கும் ஓரிரு பேராசிரியர்களோ செய்தல் இயலாது. பாவாணர் போலும் ஓரிருவரால் மட்டுமே செய்ய வியலும் வினைப்பாடுகள் அவை. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு வகுத்துக் கொடுக்கப் பெற்ற தொகையான ஓரிலக்க உருபா அப்படியொன்றும் பெரிய தொகை இல்லை. மேலும் அத்தொகையையும் இவர்கள் உடைமையிலிருந்தோ இவர்கள் தங்களுக்காக வைத்திருக்கும் வைப்புத் தொகையிலிருந்தோ எடுத்துத் தர வேண்டுவதில்லை. அரசுத் தொகை; அஃதாவது பொது மக்களின் பணம். அதை எடுத்து நல்ல விளைவுகளுக்குக் கொடுப்பதை எந்தத் திருவள்ளுவரும் தவறு என்று சொல்லவில்லை.

செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

—என்றே அவரும் சொல்லியிருக்கின்றார். ஆனால் தங்களுக்குற்ற அதிகாரச் செருக்கினால் உண்மைத் தமிழ்ப் பேராசிரியர்களைப் புறக்கணித்து விடுவதை உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் பொறுத்துக் கொள்ள முடியாது. பாவாணர்தாம் போகட்டும்; பேராசிரியர் இலக்குவனார் என்ன செய்தார்? பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் என்ன செய்தார்? அவர்களுக்கு ஏன் எவ்வகை நலனும் செய்யப்பெற வில்லை? மாறாக இருந்த நலன்களையும் ஏன் குறைக்க வேண்டும்? பொதுமக்களின் பார்வைக்கு இவர்கள் வருவதற்கு வாய்ப்பில்லை என்ற காரணியத்திற்காக, இவர்களுக்கு என்ன வேண்டுமானாலும் கொடுமை செய்துவிடலாம் என்ற எண்ணமா? பாவாணராகிலும் தங்களை வந்து கண்டு கொள்ளவில்லை; தங்கள் விருப்பப்படி நடக்க வில்லை என்பதால் அவரின் அறிவுக் களஞ்சியங்களை வெளியிட இசையவில்லை. இலக்குவனாரும், அப்பாத்துரையாரும் என்ன செய்தனர்? ஆண்டு தோறும் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் உழைத்தவர்களாயினரே இவர்கள்! இலக்குவனார் ஊர் ஊராகத் தமிழ்த் தொண்டும், பகுத்தறிவுத் தொண்டும் செய்த பயன்தானே இன்றைய

www.thamizham.net - Free E book No 7427

அமைச்சர்களும் அவர்களின் அரசும்! அப்பாத்துரையாரின் கதையோ மிகவும் அவலச்சுவை நிரம்பியது. அவருக்குப் பேராயக் கட்சி கொடுத்துக் கொண்டிருந்த ஊதியத்தை வேறு இவர்கள் வந்து மூன்றில் ஒரு பங்காகக் குறைத்துவிட்டனர். அப்படிச் செய்ததற்கு என்ன கரணியத்தை இவர்கள் காட்ட முடியும்? அரசியல் நெறி முறைகளினின்று பிழைத்து ஒழுகுபவர்களை எவரும் தட்டிக் கேட்கப் பிறர்க்கு அதிகாரமோ சாய்காலோ இல்லாமல் இருக்கலாம். அதனால் தான் இளங்கோவடிகள் 'அறம் கேட்கும்': 'அதுவே கூற்றாக நின்று ஒறுக்கும்' என்று கூறுகின்றார். அந்தக் கதை நடந்த கதை மட்டு மன்று; நடக்கப் போகும் கதையுங்கூட, என்பதை இவர்கள் நினைவில் வைத்துக்கொள்ளுதல் நல்லது.

இனி, ஓர் உயர்ந்த செயலுக்கு அரசு உதவாத விடத்துப் பொது மக்கள் நேர்நின்று உதவுதலே அறம். பெருமையும் அருமையும் வாய்ந்த இத்தகைய செயல்களை அரசோ அரசுச் சார்பில் ஒரிருவரோ செய்து தாமே செய்ததுபோல் புகழ் பெறுதலைவிட, அரசு செய்யத் தவறிய ஒரு செயலைப் பொது மக்களே முன்னின்று செய்து புகழ் பெற்றனர் என்பது வரலாற்றில் மிகவும் இனிக்கின்ற செய்தியாக என்றென் றும் இருக்கும். "அரசவை செய்யும் செய்யும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்து, மனம் நொந்து அறத்தை எள்ளல் செய்தல் வேண்டா; நெடு நாட்கள் அவ்வாறு காத்திருந்த பொறுமை நிலை இறுதியில் கை கொடுத்து உதவுவது உறுதி. அக்கால் வேந்தனது அவையின் கண் செய்யப்பெறும் சிறப்பைவிட மிகுதியும் அது செய்யும்" என்பது நீதிநெறி.

> 'மன்னர் புறங்கடை காத்து வறிதே,யாம்
> எந்நலங் காண்டும், என்று எள்ளற்க;—பன்னெடுநாள்
> காத்தவை எல்லாம் கடைமுறைபோய்க் கைகொடுத்து
> வேத்தவையின் மிக்குச் செயும்!

(இதில், காத்திருந்தார்க்கு வேந்தன் தன் அவையிலேயே வைத்துச் சிறப்புச் செய்வான்- என்று பொருள் கொள்ளப் பெறுவது தவறு. 'மன்னர் செயும்'—என்ற முடிவு கொள்ளாது, காத்தவை எல்லாம் செயும்—என்று முடிப்பதே சரி.) எனவே, அரசு செய்யத் தவறி யதைப் பொது மக்கள் தமிழ் நலம் நாடும் தூய தமிழன்பர்கள்தாம் செய் தல் வேண்டும் என்னும் கருத்தில் இத்திட்டம் வெளியிடப் பெறுகின்றது. இத்துணை விளக்கமும், இருக்கின்ற சூழ் நிலையை அவர்கள் நன்கு புரிந்து

10. அரசு செய்யத் தவறிய ஒன்றைப் பொது மக்கள் செய்வதே பெருமை மிக்கது!

www.thamizham.net - Free E book No 7427

கொள்ள வேண்டும் என்பதற்காகவே வரையப் பெறுகின்றது. பாவாணர்க்குச் செய்யவில்லையே என்று அரசிடம் முறையிட்ட பொழுது அரசினர் சொல்லிய விடையில், "பொது மக்கள் தாம் செய்கின்றார்களே" என்ற எள்ளலும் இருந்தது. அவர்கள் கூறிய இந்த எள்ளலுரையைத் தங்களுக்கிட்ட தூளுரையாகப் பொது மக்கள் கருதிக் கொள்ள வேண்டுகின்றேன். உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் ஒவ்வொன்றும் முயலுமானால் இந்த ஓரிலக்கம் உருபா பெரிய தொகையன்று. ஏழு கோடி மக்கள் தமிழ் மொழியைத் தம் தாய் மொழியாகக் கொண்டு வாழும் நிலம் இது. இதில் வாழும் மக்கள் தங்கள் மொழி நலனில் எத்துணையளவு அக்கறை கொண்டுள்ளனர் என்று கணிப்பதற்கு இத்திட்டம் ஒரு கருவியாகப் பயன்படும் என்று கருதியும் கொள்ளலாம்; அல்லது பொது மக்கள் தந்த வரிப்பணத் தைக் கொண்டு செய்யினும் தாமே செய்ததுபோல் பெருமைப் பட்டுக் கொள்ளும் ஒரு வாய்ப்பையும் அரசுக்குத் தர விரும்பாமல், பொது மக்களே முன்னின்று நேரிடையாக உதவி, பெருமையுறும்படி அமைந்த சூழலுக்கு ஒருவாறு மகிழ்வும் செய்யலாம்.

இனி, பொது மக்கள் என்ன செய்தல் வேண்டும்? அவர்கள் முன் னிலையில் வைக்கப் பெறும் திட்டம் என்ன? என்பவற்றிற்குரிய விளக் கங்கள் கீழே குறிப்பிடப் பெறுகின்றன. இது பொதுமக்கள் எல்லாருக் கும் பொதுவான ஒரு திட்டமே என்றாலும் இதில் பங்கு கொள்ள வேண்டியவர்கள் இருநூற்றுவரே ஆவர். ஆம்! ஏழு கோடித் தமிழர்களில், இருநூறு உண்மைத் தமிழ் நெஞ்சங்களாகிலும்—அதுவும் பல்லாயிரக் கணக்கான தென்மொழி அன்பர்களில் ஓர் இருநூறு பேராகிலும்—இத்திட்டத்தை நிறைவேற்ற முன்வர மாட்டார்களா

11. தென்மொழி தரும் செயல் திட்டம் என்ன?

என்ற அழுத்தமான நம்பிக்கையே இத் திட்டத்தைத் தொடங்குதற்குத் தூண்டு கோலாக இருந்தது. இருநூற்றுவர்க்கு மேல் ஒருவரைக்கூட இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ள நான் விரும்பவில்லை. விரைவாகவும், உறுதியாகவும், நம் பிக்கையாகவும் இத்திட்டத்தைத் தொடங்கிச் செயற்படுத்த வேண்டி யிருப்பதால் இருநூற்றுவரே போதுமானவராகும். இத்திட்டத்திற் குப் பாவாணர் அவர்களின் முழு இசைவையும் பெற்றிருப்பதால் ஏற் கனவே தனித்தனியாக ஈடுபட விரும்பியவர்களும் கூட உடனடியாக இதில் சேர்ந்து கொள்ளக் கேட்டுக் கொள்கின்றேன். எனவே அன்பர் கள் கீழ்க்காணும் அமைப்புமுறைகளையும் நெறிமுறைகளையும்கவனமா கப் படித்து அவற்றின்படி செயற்படுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

www.thamizham.net - Free E book No 7427

அமைப்பு முறைகள்: *1. இத்திட்டத்திற்குச்* **செந்தமிழ்ச் சொற் பிறப்பியற் பேரகரமுதலி உருவாக்க வெளியீட்டுத் திட்டம்** *என்பது பெயர்.*

2 இத்திட்டத்தில் இரண்டு துணைத் திட்டங்கள் உள்ளன. ஒன்று, **பேரகரமுதலி உருவாக்கத் திட்டம்.** *இரண்டு,* **பேரகரமுதலி வெளியீட்டுத் திட்டம்.**

3. இத்திட்டத்தின் **'உறுப்பினர்களாக' இருநூற்றுவர்** *சேர்க்கப் பெறுவர். இவ்விருநூறு திட்ட உறுப்பினர்களுள் இத்திட்டத்தின் இடைக் காலத்தில் எவரேனும் சரிவரச் செயற்படாமலோ, இயற்கை யெய்தியோ விடுவார்களானால், அவர்களின் பொருட்டுச் செயற்படு வதற்கென்று* **'அணிய உறுப்பினர்களாக' ஐம்பதின்மர்** *சேர்க்கப் பெற்று, அணியப் பட்டியலில் வரிசைப்படி வைக்கப் பெறுவர்.*

4. திட்டக் காலம் என்பது, இத்திட்டம் தொடங்கிய காலத்தி லிருந்து தொடர்ந்த ஐந்தாண்டுக் காலம் ஆகும்.

5. திட்டம் 1—3—1971-இல் தொடங்கி, 29—2—1876 முடிய முற்றுப் பெறுகின்றது.

6. இதில் திட்ட உறுப்பினர்களாகச் சேர விரும்புவார் ஒவ்வொருவரும் 20—2—1971-ஆம் நாளைக்குள், கீழே காணும் உறுதி மொழியைத் தனியாக ஒரு வெள்ளைத் தாளில் அவரவர் கைப்பட எழுதிக் கையொப்பமிட்டு, **" திரு. பெருஞ்சித்திரன், ஆசிரியர் 'தென்மொழி', கடலூர்-1."** *என்ற முகவரிக்குப் பதிவஞ்சல் வழி விடுத்து வைத்தல் வேண்டும். ஒவ்வோர் உறுதிமொழியுடனும் இரண்டு உருபா அஞ்சல் தலையும், உறுதிமொழியளிப்பவர் புகைப்படம் ஒன்றும் கட்டாயம் வைக்கப் பெறுதல் வேண்டும். புகைப்படமும், அஞ்சல் தலையும் இணைக்கப் பெறாத உறுதிமொழிகள் ஏற்றுக் கொள் ளப் பெறா. உறுதி மொழிகள் 20—2—1971-ஆம் நாள் முடிய நேரிடை யாகவும் பெற்றுக் கொள்ளப்பெறும். (இயலாத நிலையில் புகைப் படம் அந்நாளுக்குப் பின்னரும் விடுக்கப் பெறலாம்.)*

7. மேற்கண்ட நாளைக்குள் அஞ்சல் வழியோ, நேரிடையா கவோ பெற்றுக்கொள்ளப்பெறும் முதல் இருநூறு உறுதிமொழிகளுக் குரியவர்களே இத்திட்டத்தின் திட்ட உறுப்பினர்களாக ஏற்றுக் கொள்ளப் பெறுவர்.

8. முதலாகப் பதிவு பெறும் இருநூறு திட்ட உறுப்பினர்கள் நிறைவுற்றபின், அடுத்துவரும் ஐம்பதின்மர் திட்டத்தின் அணிய உறுப் பினர்களாகப் பதிந்து கொள்ளப் பெறுவர்.

www.thamizham.net - Free E book No 7427

9. 20—2—71 முடிய தேர்ந்தெடுக்கப்பெற்ற திட்ட உறுப்பினர்களுக்கு உரிய பதிவு எண்கள் 25—2—71-க்குள் அறிவிக்கப்பெறும். அடுத்த ஒரு கிழமைக்குள் அவர்களுக்கொரு பதிவு அட்டையும் விடுத்து வைக்கப் பெறும்.

10. பதிவு எண்கள் வரப்பெற்ற உறுதிமொழியாளரே திட்டத்தின் முழுச் செயற்பாட்டுக்கும் உரியவராவார்.

11. தேர்ந்தெடுக்கப் பெற்ற அணிய உறுப்பினர் வரிசையும் பதிவு எண்களும் பின்னர் அவரவர்க்கு முறையே அறிவிக்கப்பெறும். திட்ட உறுப்பினர்களுள் எவரேனும் ஒருவரோ, சிலரோ யாதானும் ஒரு கரணியம் பற்றித் திட்டக் காலத்தே செயற்படாமற் போவாராயின், அவர் பெயர் திட்டத்தினின்று நீக்கப் பெறுவதுடன், பட்டியிலுள்ள அணிய உறுப்பினர் வரிசைப்படி அவர்க்குப் பகரமாகச் செயற்படும்படி அமர்த்தப் பெறுவர். அச்செய்தி அவர்க்கு அறிவிக்கப்பெறும் வரை அணிய உறுப்பினர் அமைந்திருத்தல் வேண்டும்.

திட்ட நெறிமுறைகள் :

1. தேர்ந்தெடுக்கப்பெற்ற திட்ட உறுப்பினர் 1—3—1971 தொடங்கி, திட்டக் கால முடிவுவரை (5 ஆண்டுக் காலம்) ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5-ம் பக்கலுக்குள் **ஞா. தேவநேயப் பாவாணர், ஆ. 1135, 2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை, காட்டுப்பாடி விரிவு, வ.ஆ. மாவட்டம்**—என்ற முகவரிக்கு உருபா. பத்து மட்டும் கட்டாயம் பணவிடை வழி விடுத்து வைக்க வேண்டும். உறுப்பினர் விரும்பின் ஐந்தாண்டுக்கான மொத்தத் தொகையை ஒரு சேரவும் தரலாம்.

2. பணவிடைக் கிழிப்பத்தில் கீழ்வருமாறு விளக்கங்கள் எழுதப் பெறுதல் வேண்டும்.

திட்ட உறுப்பினர் எண் :
உறுப்பினர் பெயர் :
செ. சொ. பி. பேரகரமுதலி உருவாக்கத் தொகை உரு. 5.
செ. சொ. பி. பேரகரமுதலி வெளியீட்டுத் தொகை ,, 5.
ஆக மொத்தம் உருபா: பத்து மட்டும்.

3. திட்ட உறுப்பினர்கள் இருநூற்றுவர் பெயர்களும், **“பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியற் பேரகரமுதலி உருவாக்கத்திற்கும் வெளியீட்டிற்கும் உதவி வரும் தென்மொழி அன்பர்கள்”** என்ற தலைப்பில், ஒவ்வொரு **தென்மொழி** இதழிலும், தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்கு வெளியிடப் பெறும்,

4. அதுவுமன்றித் திட்ட உறுப்பினர்கள் இருநூற்றுவர் பெயர்களும் தம்தம் ஊர்ப்பெயர்களுடன் **பாவாணரின் செந்தமிழ்ச்**

www.thamizham.net - Free E book No 7427

சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் எல்லா மடலங்களிலும் வாழ்த்துப் பாடலோடு (முடிந்தால் படங்களுடனும்) பொறிக்கப்பெறும்.

5. அதுவுமன்றித் திட்டப்படி வெளியிடப்பெறும் பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் எல்லா மடலங்களும் அடங்கிய தொகுப்பு ஒன்றும் ஒவ்வொரு திட்ட உறுப்பினர்க்கும் அன்பளிப்பாகத் தரப் பெறும்.

6. திட்டப்படி, உறுப்பினர்களால் ஒவ்வொரு மாதமும் விடுக்கப் பெறும் உருவாக்கத் தொகை உரு. ஆயிரத்தில் ஒரு பகுதி பாவாணரின் உணவு, உடை, உறையுள் செலவுக்கும், மீதிப்பகுதி அகர முதலியைத் தொகுப்புதற்காகும் வெளியூர்ச் செலவிற்கும், உடல் முயற்சிக்கும் பயன்படுத்தப் பெறும். பாவாணர் அவர்கள் 1—3—71 தொடங்கி எழுதப் பெறவிருக்கும் அகரமுதலியின் வளர்ச்சி நிலைகள் அவ்வப் பொழுது தென்மொழி வாயிலாய் திட்ட உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பெறும்.

7. திட்டப்படி, உறுப்பினர்களால் ஒவ்வொரு மாதமும் விடுக்கப் பெறும் வெளியீட்டுத் தொகை உருபா. ஆயிரமும் பாவாணரவர்களின் பெயராலேயே நிலைப்பிருப்பாக வைப்பகத்தில் இட்டு வைக்கப் பெறும். ஐந்தாம் ஆண்டின் முடிவில் இத்தொகை அறுபதாயிரமாகவும் அதற்குண்டான கூடுதலுடனும் கிடைக்கும். இத்தொகை பாவாணரவர்களின் சொற்பிறப்பியலகரமுதலியின் வெளியீட்டுக்குப் பயன்படுத்தப்பெறும்.

8. பாவாணரவர்களின் கருத்துப்படி சொற்பிறப்பியலகரமுதலி, அது தொடங்கிய ஐந்தாண்டிற்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப் பெறுகின்றது. ஒருவேளை அக்காலம் கூடினும், திட்டம் அதுகால் உள்ள நிலைமைக்குத் தக்கபடி நீட்டிக்கப்பெறும்.

9. திட்ட முடிவில் சேரும் மொத்த வெளியீட்டுத் தொகை, அக்கால் உருவாகியிருக்கும் அகரமுதலியின் மொத்த மடலங்களையும் (ஏறத்தாழ ஐந்தாறு மடலங்களாகும் என்று கணிக்கப்பெற்றுள்ளது) அக்கால் உள்ள தாள், அச்சு முதலியவற்றின் விலையமைப்புப்படி, வெளியிடப் போதாதென்று கருதப் பெறுமானால், முதலில் அத்தொகைக்குள் அச்சிட முடிந்த மடலங்களை மட்டும் வெளியிட்டு, விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டோ, வேறு தனித்திட்டத்தின் வழி திரட்டப்பெறும் தொகையைக் கொண்டோ, பிற மடலங்களை வெளியிடுவதென்றும் திட்டமிடப் பெற்றுள்ளது.

www.thamizham.net - Free E book No 7427

10. 9-ஆம் நெறிப்படி பின்னர் தேவைப்படுமிடத்துத் தொடங்கக் கருதியுள்ள புதுத்திட்டம், இக்கால் வெளியிடப்பெறும் இத்திட்டத்தின் 4-ஆம் 5-ஆம் நெறிமுறைகள் செயற்படுவதை எவ்வகையானும் தடை செய்யா தென்று உறுதியளிக்கப் பெறுகின்றது.

11. திட்டக் காலத்தின் இடையில் நீக்கப்பெற்ற உறுப்பினரின் பெயர்களும், அகரமுதலியின் திட்ட உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளாமல் விடுக்கப்பெறும் பிற தொகைகளும் இதில் சேர்க்கப் பெறா.

உறுதிமொழி ;

அமைப்பு முறை எண் 6-இல் கூறப்பெற்றுள்ள உறுதிமொழி வருமாறு :

விடுக்குநர் : ... ...

பெறுநர் :
திரு. பெருஞ்சித்திரன் அவர்கள்,
ஆசிரியர், 'தென்மொழி'.
கடலூர்-1.

அன்புடையீர்,

வணக்கம்.

தென்மொழி சுவடி 8 ஓலை 8, 9-இல் தாங்கள் வெளியிட்டுள்ள பாவாணரின் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியற் பேரகரமுதலி உருவாக்க வெளியீட்டுத் திட்ட' அறிக்கை முழுமையும் நான் படித்துப் பார்த்தேன். அவ்வறிக்கையின் முடிவில் தரப்பெற்றுள்ள திட்ட அமைப்பு முறைகள் நெறி முறைகள் யாவற்றையும் நான் ஒப்புக் கொள்வதுடன், என்னையும் அத்திட்டத்தில் ஓர் உறுப்பினனாகப் பதிவு செய்து கொள்ளக் கேட்டுக்கொள்கின்றேன்.

திட்ட நெறிமுறைப்படி 1—3—1971-ஆம் நாள் தொடங்கி 29—2—1976 முடிய, ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5-ஆம் நாளைக்குள் உருபா பத்து மட்டும், மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் முகவரிக்குத் தொடர்ந்து பணவிடை வழிவிடுத்து வைக்க உறுதியளிப்பதோடு, திட்டக் கால இடையில் ஏதாவதொரு முறை பணம் விடுக்க, நான் தவறினாலும், என்னைத் திட்ட உறுப்பினர் வரிசையினின்று நீக்கிவிட்டு, அவ்விடத்தில் வேறோர் உறுப்பினரைச் சேர்த்துக்கொள்வதற்குத் தங்கட்கு என் முழு இசைவையும் அளிக்கின்றேன்.

www.thamizham.net - Free E book No 7427

திட்ட நெறி முறைப்படி என் புகைப்படம் ஒன்றையும் இரண்டு உருபாவுக்கான இந்திய அஞ்சல் தலைகளையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

இங்ஙன்,

நிலையான முழு முகவரி :

(கையொப்பம்)

மேலே அறிவிக்கப் பெற்றுள்ள திட்டத்தை மிகுந்த நம்பிக்கையுடனும், உள்ளத் தூய்மையுடனும் அறிவித்துள்ளேன். இதில் எந்த வகையான சிறுமை நோக்கிற்கும் இடமில்லை. இத் திட்ட அறிக்கை ஒரேயொரு முறைதான் தென்மொழியில் அச்சிடப்பெறும். ஆதலாலும், அடுத்துவரும் மாதம் திட்டம் செயற்படத் தொடங்கும் மாதமாதலாலும், இவ்வறிக்கையைக் கண்ணுறும் அன்பர்கள் யாவரும், இத்திட்டத்தைப் பற்றித் தம்

12. என் இறுதியான வேண்டுகோள்.

தம் நண்பர்களிடமும், அன்பர்களிடமும், உறவினர்களிடமும் அறிவித்து, உடனடியாக உறுதிமொழிகளைத் தனித்தனியாகவோ ஒரு சேரத் தொகுத்தோ எனக்கு விடுத்து வைக்கக் கேட்டுக் கொள்கின்றேன். இத் திட்ட அறிக்கையின் இடைப்பகுதியில் அரசியல் தலைவர்கள் சிலரைக் குறைகூறியிருப்பது அன்பர் சிலர்க்குப் பிடிக்காமலும் சிலர்க்கு எரிச்சலூட்டுவதாகவும் இருக்கலாம். ஆனால் முழுக்க முழுக்க இத் திட்டம் அரசியலுக்கு அப்பாற்பட்டது. நானும் அரசியலுக்கு அப்பாற்பட்டவன். என் நோக்கு முழுவதும் தமிழையும், தமிழர்களையும், தமிழ் நாட்டையுமே சார்ந்ததாகும். என் மூச்சுள்ளவரையிலும் அம் மூன்றிற்காகவும் இராப்பகலாக உழைப்பதையே பேரின்பமாகவும், கடமையாகவும் கருதுகின்றவன் நான். இத் திட்டம் அவற்றின் அடிப்படையிலேயே உருவாக்கப் பெற்றது. இதில் எந்த வகை அரசியலுக்கும் இடமில்லை. அப்படி இடமிருப்பதாகத் தருக்க மிடுபவர்களை அன்புடன் நான் வேண்டிக்கொள்வது இதுதான்: என்மேலும் என் கருத்துகளின்மேலும் உள்ள வெறுப்பையும் வெகுளியையும் என் மேலேயே வீசி எறியுங்கள். என் மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய ஆசிரியராகிய பாவாணரின் மேல் எறியாதீர்கள். நான் அவருக்கு வேண்டியவனாக இருக்கலாம்; ஆனால் அவர் எனக்கு மட்டும் வேண்டியவரல்லர். இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டியவர். அவர் அறிவால் தமிழும், தமிழ் மக்களும், தமிழ்நாடும் உயரப் போவதும், உய்யப் போவதும் உறுதி, உறுதி, உறுதி. எனவே அவர் பொருட்டு என்னைப் பொறுத்துக்கொண்டு, அவருக்காக அமைக்கப்

www.thamizham.net - Free E book No 7427

பெற்ற இத்திட்டத்தை நிறைவேற்றுமாறு தலைவணங்கிக் கேட்டுக் கொள்கின்றேன். இத்திட்டம் போலும் ஒன்றை என் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய தமிழன்பர் சிலர் ஏற்கனவே திட்டமிட்டிருக்கவும் கூடும். அதைச் செயற்படுத்துதற்கு வாய்ப்பில்லாமல் போயிருக்கவும் கூடும். ஆனால் திட்டங்கள் எங்கு, எக்காலத்தில், எவரால் உருவாக் பெற்றன என்பது முகாமையானதன்று. அவை எவ்வகைச் சிக்கலுக்குத் தீர்வு கண்டது என்பதே இன்றியமையாதது. கனிகள் எந்த மரத்தில், எந்தக் காலத்தில் எவரால் விளைவிக்கப் பெற்றன என்பதைவிட, எவர்க்குப் பயன்படுகின்றன என்பதை எண்ணிப் பார்ப்பதே அறிவுடைமையும், அருளுடைமையுமாகும்! பொதுமை மாந்தனுக்கு வேண்டிய உணர்வும் அதுவே!

திட்டத்தைக் கொடுத்துள்ளேன்; செயற்படுமாறு உங்களை மீண்டும் வேண்டிக் கொள்கின்றேன்.

உறுதி பயப்ப கடைபோகா வேனும்
இறுதிவரை காறும் முயல்ப;-இறும்உயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால்; அல்லனபோல்
ஆவனவும் உண்டு, சில.

12 சுறவம் 2002
25—1—'71
கடலூர்-1.

என்றும் உங்கள் அன்பன்,

பெருஞ்சித்திரன்.

மாணவர்கள், தமிழன்பர்கள் கவனிக்க.

அடிக்கடி பள்ளி, கல்லூரி மாணவர்களிடமிருந்தும் ஆங்காங்குள்ள தமிழன்பர்களிடமிருந்தும் **தென்மொழி, தமிழ்ச்சிட்டு** பழைய படிகள் வேண்டியும், தென்மொழி வெளியீடுகளைக் கேட்டும் மடல்கள் வருகின்றன. சிலர் கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக வெளிவந்த படிகள் அனைத்தும் கேட்கின்றனர். அவற்றையெல்லாம் தொகுத்து விடுத்து வைப்பதில் பல இடர்பாடுகளும் மிகுதியான அஞ்சற் செலவும் நேர்கின்றன. பழைய இதழ்கள் பகுதி விலைக்குக் கொடுக்கப்பட்டும், மிகுந்த இடைச் செலவுகளால் அன்பர்கள், குறிப்பாக மாணவர்கள் நலனடைய முடியவில்லை.

எனவே, தென்மொழியிலிருந்து ஒவ்வொரு கிழமையிலும் பெரும்பாலும் ஞாயிற்றுக் கிழமைகளில் அன்பர்கள் பழைய இதழ்களுடனும், பிற தென்மொழி வெளியீடுகளுடனும் ஒவ்வொரு கல்லூரிக்கும் வருவர். தேவையான கல்லூரி மாணவர்கள் முன் கூட்டியே தென்மொழிச் சுற்று முகாமின் வரவை அறிய வேண்டின் அலுவலகத்திற்கு எழுதக் கேட்டுக் கொள்கின்றோம். —அமைச்சர்.

www.thamizham.net - Free E book No 7427

வல்லான் வகுத்த வழி

—மொழிஞாயிறு- ஞா. தேவநேயப் பாவாணர்

நான் பள்ளியிறுதி மாணவனு யிருந்தபோது ஆங்கிலப் பற்றுள னுகவும் பேச்சாளனுகவு மிருந்ததனுல், என் பயிற்சி முடிந்தபின் ஆங்கில இலக்கியத்தை, சிறப்பாகச் சேக்சுப்பியரின் முப்பானேழ் நாடகங்களையும், கற்றுய்ந்து கரைகண்டு எருதந்துறை யாங்கிலப் பேராசிரியனுக அமர விரும்பினேன். ஆயின், எதிர்பாராத சில சூழ்நிலை களால் என் மனம் தமிழ்ப் பணிக்கு ஈர்க்கப் பட்டுவிட்டது.

அதன்பின், மொழியாராய்ச்சியில் ஆழ மூழ்கித் தமிழின் அடிநிலை கண்டு தமிழே திரவிடத்திற்குத் தாயும், ஆரியத்திற்கு மூலமும் என்னும் உண்மையுணர்ந்ததனுலும், அவ்வாராய்ச்சி முற்றுமாறு மேனுள் சேலங் கல்லூரி முதல்வர் பேரா. இராமசாமி(க்கவுண்டர்) அவர்கள் அக் கல்லூரியில் என்னைத் தமிழ்த் துறைத் தலைவனுக எளிதாயமர்த் திக் கொண்டமையாலும், நிறைதமிழ் மலையாம் மறைமலையடிகள் என்னைப் பாராட்டி ஊக்கியமையாலும், என் மொழியாராய்ச்சி நூல்கள் பல வெளிவர வாய்ப்பு நேர்ந்தமையாலும், என்னையன்றி வேறெவரும் இவ்வாராய்ச்சி செய்யாமையாலும், இவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாத பண்புகளையெல்லாம் இறைவன் என் பிறப்பிலேயே அமைத்து விட்டமையாலும்; ஆங்கிலப் பணியாற்ற விருந்த என்னை இறைவன் தமிழ்ப் பணிக்குத் தடுத்தாட்கொண்டதாகவே கருது கின்றேன்.

நான் எத்தனையோ நூல்கள் எழுதினும், என் அரைநூற்றுண் டாராய்ச்சியின் தலைசிறந்த பயன், தமிழ்ப் பகைவர் தொகுத்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலியைத் திருத்துவதும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியொன்று தொகுப்பதுமே. இவ்விரண்டிற்கும் பெருஞ்செலவு செல்லுமாதலால், பல்கலைக் கழகமும் அரசுமே இப்பணியை மேற்கொள்ளத் தக்கன.

அறிவாராய்ச்சி மிக்க இவ்விருபதாம் நூற்றுண்டிலும், தமிழகத் தில் ஆரியம் வேரூன்றியிருப்பதால், ஆரியர் ஆண்ட பேராய ஆட்சி யிலும் ஆரிய அடிமையர் ஆண்ட பேராய ஆட்சியிலும், மேற்குறித்த பணி நிகழும் நிலைமை ஏற்படவில்லை.

www.thamizham.net - Free E book No 7427

இந்தியை அடியோடொழிப்போ மென்றும், தமிழிற்காக உயிரைக் கொடுப்போமென்றும், சொல்லிப் புகுந்த தி. மு. க. அரசும், ஆட்சியேற்று நாலாண்டாகியும் பேராசிரியரும் பெருமக்களும் எத்துணையோ எடுத்துச் சொல்லியும், இதுகாறும் தமிழுக்கு எத்தகைய ஆக்க வேலையுஞ் செய்யவில்லை. தி. மு. க. அரசிற்குத் தமிழ்ப்பற்று இல்லாமலில்லை யென்றும், ஏதேனும் திட்டம் வகுத்துக்காட்டினால் உடனே அதை நிறைவேற்றுமென்றும், சிலர் கூறியதால் அதையுஞ் சிறப்பாகச் செய்து பார்த்தோம். "தானாகக் கனியாதது தடியாலடித்தாலுங் கனியாது" என்னும் உண்மையே விளங்கிற்று.

" வாதக்கோன் நாளையென்றான் வத்தக்கோன் பின்னையென்றான்
ஏதக்கோன் யாதேனும் இல்லையென்றான்—ஓதக்கேள்
வாதக்கோன் நாளையினும் வத்தக்கோன் பின்னையினும்
ஏதக்கோன் 'இல்லை' இனிது."

என்று ஔவையார் பாடியவாறு, தி. மு. க. வின் பின்னையினும் பேராயத்தின் 'இல்லை'யே இனிது என்னுமாறாயிற்று.

தி. மு. க. சார்பான தமிழன்பர் சிலர், இன்னும் சற்றுப் பொறுத்திருந்தால் அரசு உதவும் என்பர். இலவுகாத்த கட்டுக்கதைக் கிளியும் பஞ்சு வெடித்தபின் ஏமாற்றமடைந்ததேயன்றி, இன்னும் சற்றுப் பொறுத்திருந்தாற் பழுக்குமென்று கருதவில்லை. ஆதலால், இன்னும் தி. மு. க. உதவுமென்று காத்திருப்பது, அஃறிணையினும் இழிந்த பகுத்தறிவின்மையையே காட்டும்.

மேலும், ஆராய்ச்சிக்கு இன்றியமையாத தகுதியாகிய மூப்பையே தகுதியின்மையாகக் காட்டுவதும், ஒருவினைக்குச் சிறந்த தகுதியுள்ள ஒருவரை அமர்த்தாது தகுதி சிறிதுமில்லாத பலர் சேர்ந்த குழுவை அமர்த்துவதும், அறிவுடைமையின்பாற் படாத பயனில் செயலேயாகும். இனி, பொதுத் தேர்தலைச் சுட்டிக் கடமையைக் கடத்துவதும், விரைசெயல் தூண்டுகோலையே முட்டுக் கட்டையாகக் காட்டுவதாகும்.

தமிழ் எதிர்காலத்தில் வாழவும் வளரவும் இன்றியமையாத பணி செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பேயாதலாலும், இதை என்னையன்றி வேறெவரும் செய்யவியலாதாகையாலும், எனக்கு வரவர மூப்பு மிகுவதாலும், தமிழன்பரான பொது மக்களின்

www.thamizham.net - Free E book No 7427

உதவி கொண்டு இப்பணியை இன்னே செய்ய உ. த. க. பொதுச் செயலாளர் பாவலர் பெருஞ்சித்திரனார் தாம் வகுத்திருக்கும் திட்டத்தை, உடனே செயற்படுத்த என் முழு இசைவையும் இதனால் தருகின்றேன்.

எல்லாம் வல்ல இறைவன் வகுத்த வழி இதுவேயாகும்.

காட்டுப்பாடி
விரிவு
க. சுறவம், 2002.

உலகத் தமிழ்க் கழகத் தலைவன்.

பாவலர் பெருஞ்சித்திரனாரின்
புதிய வெளியீடு

கற்பனை ஊற்று

விலை 2-50.

பதிவஞ்சலில் பெறவிரும்புவோர் 1-50 உரு. சேர்த்துவிடுக்க.
தென்மொழி கடலூர்-1.

மகப்பேற்றிற்கு அன்பளிப்பு

1. 'தென்மொழி' அன்பர் திருச்சி **திரு. பெ. வெற்றிக்கூத்தன்** அவர்கட்கும், அவர்தம் துணைவியார் **இசையரசி** அவர்கட்கும் 23—12—10 அன்று பெண் மகவு பிறந்து **தேன்மொழி** என்ற பெயர் வைத்ததன் நினைவாக உரு: 101-00-ஐத் **'தென்மொழி'**யின் வளர்ச்சிக்கு அன்பளிப்பாக விடுத்துள்ளனர்.

அன்னார் தம் மகவுடன் எல்லா நலன்களும் பெற்று இனிது வாழ வாழ்த்தியும், அவர்தம் தமிழ் நெஞ்சத்திற்கு நன்றி கூறியும் மகிழ்கின்றோம்.

2. தென்மொழி அன்பர்கள் திரு. **நா. எழில்மகிழ்நன்–தமிழரசி**—ஆகியோர்க்கு 21-1-71 அன்று ஆண் குழந்தை பிறந்ததன் நினைவாக உரு. 5-00 விடுத்துள்ளமைக்கு மனமார்ந்த நன்றியும் வாழ்த்தும் அளிக்கின்றோம்.

—**அமைச்சர்.**

www.thamizham.net - Free E book No 7427

தென்மொழிக்கு நன்கொடை.

6-8-69 முதல் 7-8-69 முடிய தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர் விடுத்த நன்கொடைப் பட்டியல் பின்வருமாறு : ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத் தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

1 திரு. சேகர், தியாகராசர் கல்லூரி, மதுரை 3—00

2 மதுரை தியாகராசர் கல்லூரியில் உரு 2-00 கொடுத்த மாணவர் -கள் திருவாளர்கள்-க.இளவழுதி, பாசுடின், சாசகான், அ. சாமி நாதன், சீனிவாசன், இராம இலக்குவன், வி. பழனியப்பன், மு.சோலைமுத்து, காசிலிங்கம், இரா. சவகர், பழநியாண்டி உரு 22-00

3 எழிற் பூங்கா மாணவரில்லம் சென்னை-2.
ஓர் உருபா அளித்த மாணவர்கள், திருவாளர்கள் :
இராம-முத்துசாமி, கோ. சானகிராமன், ப. சுகுமார், சு. வேங் கடராமன், அ. ஏ. ஏழுமலை, வ. கலியபெருமாள், ப. இராம மூர்த்தி, தொ. மாசிலாமணி, மு. சுப்பராயன், சி. மனுகாந்தி, நா. மணவாள இராமனுசம், வே. நித்தியானந்தன், நா. சிவக் கொழுந்து. உருபா 13-00

4 0—50 காசு அளித்த சென்னை அன்பர்கள் :
திருவாளர்கள்—சி. சுந்தரம், இ. சதாசிவன், ந. தங்கவேல். மா. குருசாமி. 2—00

5 திரு. எசு. அந்தோணி, சென்னை. 1—00

6 திரு சு இராமன், ,, 0—25

7 உரு. 5-00 அளித்த நெய்வேலி அன்பர்கள் :
திருவாளர்கள்—த. மொழிக்கரசு, தனிமகன், இரா. நக்கீரன், க. நடவரசன், பரமசிவம், இரா. வேங்கடேசன், அருளாளன், 35—00

8 உரு. 2—00 அளித்த நெய்வேலி அன்பர்கள்:
திருவாளர்கள்—இறையொளி, தா. அன்புவாணன், வே. சிந்த னைச் செல்வன். 6—00

9 உரு. 1—00 அளித்த நெய்வேலி அன்பர்கள்:
திருவாளர்கள்—கோ. தங்கவேலு, செ. பாலன், ஆ. ஒ. நவநீதன்.

திருவாளர்கள்—

10 ஆ. கருப்பையா, நெய்வேலி. 10—00

11 மு. வள்ளியப்பன், ,, 6—00

12 இரா. மணநாதன், ,, 3—00

13 சி. திருமாவளவன், ,, 2—10

14 நா. அண்ணல் தங்கோ, புதுவேப்பங்குறிச்சி. 3—00

—அமைச்சர், தென்மொழி.

www.thamizham.net - Free E book No 7427

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

காலிங்கம்

பேராசிரியர். க. ப. அறவாணன், க. மு.

9.0; பதவுரை: கிடைத்த உரைகளுள் பரிமேலழகர் உரை மட்டுமே. ஒவ்வொரு சொல்லுக்கும் உரை கூறுவது. காலிங்கரும், என்றது' என்ற இணைவுச் சொல்லால் பதவுரை கூறுவதைப் பார்க்கின்றோம். எடுத்துக்காட்டாக, 'மணிநீரும் என்றது பளிங்கு போலத் தெளிந்து. ஆழமுடைமையும் வற்றாமையும்; மண்ணும் என்றது நாற் பெருஞ் சேனையும் அகத்து அடியிடுதற்கு அரிய இடமும்; மலையும் என்றது, மற்று அதன் புறத்து முற்றி ஓங்கித் தலைமயக்குறுத்து நிற்கும் மலையும்; அணிநிழல் காடும் என்றது, ஆங்கு அதன் புறஞ் சூழ்ந்து ஓங்கிப் பரந்த தூங்கிருள் காடும்; வகையறப்பெற்ற இவை நான்கினையும் உடையதே அரண் [742], என்று அமைக்கிறார். இது போன்றே குறள் 382,737 ஆகியவற்றிற்கும் காணலாம். 'என்றது' என்ற இணைவுச் சொல்லிட்டு உரை கூறும் முறை இவருக்கே உரிய தனிமுறையாம்.

10.0. கருத்துரை கூறல். பதவுரை, பொழிப்புரை கூறிக் கருத்தையும் கூறல் இடைக்கால மரபு. காலிங்கர் பொழிப்புரை கூறிச் சில இடங்களில் கருத்துரையையும் காட்டிச் செல்வதைக் காண்கிறோம் குறள் 155, 162, 219, 322, 389, 503, 1084, 1085, 1090, ஆகியவற்றில் கருத்துரை கூறலைக் காணலாம்.

11 0. இரட்டுரை கூறல்: மூலநூல் தோன்றிப் பல ஆண்டுகளுக்குப்பின் உரைகாரர் உரை எழுத நேர்வதால், மூலத்தை ஒரே கருத்துக்கொண்டு காணுதல் மிகக் கடினம். சில இடங்களில் பல உரை விளக்கங்களை ஆசிரியர் உரைக்க நேரலாம். இதனை இரட்டுற மொழிதல் என்பர் இலக்கணியர். காலிங்கர், 133, 153, 392, 614, 624 831 ஆகிய பாக்களில் இரட்டுற மொழிந்துள்ளார். இவ்வாறு இரட்டுரை கூறுகையில் 'அல்லதூஉம்' [அவ்வுரை யல்லாமலும்]என்ற சொல்லினைக்காட்டி இரண்டாம் உரை எழுதுவது இவரது வழக்கம்.

12 0; இலக்கணக் குறிப்புக் கூறுதல்: இலக்கணம் இலக்கியத்தைப் புரிந்து கொள்ளத் துணையாக இருப்பது என்பது பண்டை உரையாசிரியர் கொள்கை. மெல்லிலை என்று வரும் சிந்தாமணித் தொடருக்கு நச்சினார்க்கினியர் இது பண்புத்தொகை அன்று வினைத் தொகை என்று குறிப்பிடுகிறார். இக்குறிப்பின் மூலம் மெல்லிலை என்பது வெற்றிலை என்றறிகிறோம். ஆகையால் உரையாசிரியர்கள் இலக்

www.thamizham.net - Free E book No 7427

கணக் குறிப்பைக் காட்டுதல் உரைக்குத் தேவையாக அமைந்து விட்டது. காலிங்கரும் ஒருசில இடங்களில் இலக்கணக் குறிப்பைத் தருவதைக் காண்கிறோம். குறள் 165-இல் 'வழுக்கியும்' என்ற உம்மை யான் மறந்து என்றாயிற்று, என்றும், குறள் 899-இல், "வேந்தனும்' என்ற உம்மை சிறப்பும்மையாகலான் மேற்சொன்ன நாடும், பொருளும், பெரும்படையும் உடையவர் எனினும், கெட்டுவிடும் என்றவாறு" என்றும், குறள் 1207-இல் 'மற்கொல்' என்றது அசைச்சொல் என்றும் இலக்கணக் குறிப்புக்காட்டுவது பாவின் பொருளறிவதற்குப் பெருந்துணையாக நிற்கிறது.

13.0. உவமைகொண்டு விளக்குதல்: கருத்துப் பொருள் விளக்கத்திற்கு உவமை தலையாய கருவியாகும். திருக்குறளின் கருத்துப் பொருளை விளக்க வந்த காலிங்கர், அழகான உவமைகளை அருமையான இடங்களில் கையாளுகிறார். பால் புளித்தலும், பகல் இருளாதலும், இல்லையாதலால், நயனுடையான் ஒப்புரவிற்கு இளையான்' என்றும் [குறள் 219] காஞ்சிரம் பிஞ்சும் காஞ்சிர மரமும் இத்துணையல்லது, பிறிதொன்று ஆகாதாற் போல[877] என்றும் உவமைகளை அரிதாக இவர் கையாளுகிறார்.

14.0: 131, 155, 165, 412, 511, 575, 589, 698, 826, 1096 ஆகியன 'படும்' என முடிகின்ற சில குறட்பாக்களாகும். இவ்விடங்களிலெல்லாம் காலிங்கர் திட்டமிட்டாற்போல 'அடுக்கும்"என்றே உரை எழுதுகிறார். இது வேறு உரைகாரர்களிடம் இல்லாத தனிச்சிறப்பான பொருள் கொள்ளும் முறையாகும்.

15.0: ஒவ்வொரு திருக்குறள் முடிவிலும் 'என்றவாறு' என்று முடிப்பதும், சொற்பொருள் காட்டும் போதும், சொல்விளக்கம் தரும் போதும் 'என்பது' என்ற இணைவுச் சொல்லைச் சேர்த்து உரைத்து முடிப்பதும் இவரின் முறைகள். சொல்லிறுதியில் 'பாடு' என்னும் விகுதியை இணைத்துச் சொல்லும் பாங்கை இவரிடத்துப் பார்க்கிறோம். வீரப்பாடு [609] தலைமைப்பாடு என்பன அவ்வாறு அமைந்தவை.

16.0: இவரது உரையில் சில அரிய சொல்லாட்சிகள் காணப்படுகின்றன. நணுமை [353] என்றும், இன்னுங்கு [224, 229, 230, 243] என்றும், தழீஇயாது [602] என்றும், இவர் ஆளுகின்ற சொற்கள் கருதத்தக்கவை.

www.thamizham.net - Free E book No 7427

17.0: உரையில் குறைபாடுகள். ஒரு காலத்தில் எழுதிய நூலுக்கு உரைகாரர் இன்னொரு காலத்தில் உரை எழுதுகிறார். ஏடு எழுதுவோர் அதனை இன்னொரு காலத்தில் எடுத்தெழுதுகிறார் கற்போர் அதனை இன்னொருகாலத்தில் கற்கிறார். இதனால் மூல நூலாரின் அல்லது உரை நூலாரின் கருத்துகளை மாறுபட உணர்ந்துவிடக் கூடும். அல்லது உரைகாரரின் கருத்தே பிழையாக மாறிவிடவும் கூடும். உரையில் ஒரு சில வரிகள் இடையில் மறைந்து போனாலும்கூட அவ்வுரை தெளிவற்றதாகிவிடும். குறள் 664-இன் உரைப்பொருள் தெளிவாக விளங்கவில்லை. குறள் 681, 682 ஆகிய வற்றின் உரைகள் சிறந்தனவாகத் தோன்றவில்லை

"அன்புடைமை ஆன்ற குடிபிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு"—(681)

"அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றியமை யாத மூன்று"—(682)

இவ்விரண்டு குறட்பாக்களிலும் அன்புடைமை [681], அன்பு [682] என்ற பண்பு தூதுரைப்பானுக்கு வேண்டிய பண்பாக இரு முறை கூறப்பட்டுள்ளது. காலிங்கர் இவ்விரண்டிடத்தும், "அரசர் மாட்டு அன்பு பெரிதுடைமை" என்றே உரை வகுத்தார். ஒரே இனப் பண்பை, ஒரே யதிகாரத்தில் அடுத்தடுத்துக் கூறுவது கூறியது கூறல் என்ற குற்றத்தின் பாற்படக்கூடும்.

17.1: இக்குறையைப் பின் வந்தவரான பரிமேலழகர் நன் குணர்ந்து அன்புடைமை என்பதற்கு [681] தன் சுற்றத்தார் மாட்டு அன்புடையனாதல்' என்றும், அன்பு (682) என்பதற்குத்தன் 'அரசன் மாட்டு அன்புடைமை' என்றும் பொருள் காணுகிறார். இவ் விருவரது உரையில் பரிமேலழகர் உரை சிறப்பாக இருத்தலை அறி கிறோம்.

17.2: காதல் சிறப்புரைத்தல் என்ற அதிகாரத்தில் 'கண்ணுள் ளார் காதல் அவராக' என்ற பாட்டின் உரையில் ஆண்பாற் கூற் றாகக் கிளவித்துறை கூறிவரும் காலிங்கர், ஆடவர் கண்ணுக்கு மை தீட்டுவதாகக் காட்டுகின்றார். கண் எழுதுதல் மகளிர் மரபேயன்றி ஆடவர் மரபன்று. ஆதலால் காலிங்கர் உரை, மரபுக்கு மாறான குறைபாடு உடையது என்று கருதலாம். ஆனால் சீவகசிந்தாமணி யில் ஆடவர்க்கும் மை எழுதும் வழக்கம் உண்டென்பது, பூமகள் இலம்பகம் 2357-ஆம் பாட்டில் தெளிவாகின்றது. சீவகன் தன்

www.thamizham.net - Free E book No 7427

கையால், அஞ்சன மைதீட்டிக்கொண்ட காட்சியை இப்பாட்டுக்காட்டு கின்றது. இதனுல் காலிங்கரின் குறிப்பு ஒரு காலத்தில் உண்மையாக வும் இருந்திருக்கலாம்.

18.0: உரையற்ற குறட்பாக்கள்: நெடுங்காலமாகக் காலிங்கர் உரை கிடைக்காமலிருந்தது. மிகப் பிற்காலத்தில்தான் காலிங்கர் உரை கிடைத்தது. காலிங்கர் உரை காமத்துப்பாலை முதலாவது பதித்த தி. பொ. பழனியப்பப்பிள்ளை தமக்குக் "குலைவற்ற அறத்துப் பால், பொருட்பால், காலிங்கர் உரைப்பகுதிகள் கிட்டவில்லை. அவை செல்லரிப்பு உண்டு கிடந்தன. அதனுலேயே காமத்துட்பாலை மட்டும் பதித்த தாகக் கூறுகிருர்.[15] தருமபுரத்துத் தண்டபாணிதேசிகரது, திருக்குறள் உரைவளப்பதிப்பில், அறத்துப்பாலும் பொருட்பாலும், காலிங்க உரையோடு வந்தன. பின்னர் திருக்குறள் முழுமையுமாக, உரைக்கோவையில் திருப்பனந்தாள் காசி மடத்தார் பதிப்பித்தார்கள். இப் பதிப்புகளை ஆராயும் பொழுது, நிறைய குறட்பாக்களுக்குக் காலிங்கர் உரையே இல்லை எனத் தெரிய வருகிறது. குறிப்பாக அறத்துப்பாலில் நிறைய பாக்களின் உரை கிடைக்கவில்லை. உரை யில்லாத குறட்பாக்களாவன:

18.1: 46, 48, 49, 50, 51, 52, 62, 85, 87. 88, 89, 111, 124, 127, 128, 129, 130. 142. 145, 146, 149, 164, 168. 170, 173, 192, 196, 197, 200, 212, 213, 216, 217, 220, 255. 162, 263, 264, 266. 268, 269, 292, 299, 300, 301, 302, 305. 308, 310.

18.2: சில திருக்குறட்பாக்களுக்கு உரை முழுமையாகக் கிடைக்காமல், அரைகுறையாகக் கிடைத்துள்ளது. அவையாவன: 81, 255, 413, 743, 970.

19.3: உரைகள் கிட்டாதபோது, ஓர் உரையை மற்ருேர் உரை யாகப் பதிப்பித்தல் உண்டு. பேராசிரியரின் தொல்காப்பிய உரையை நச்சினுர்க்கினியர் உரையாக மயங்கியதுண்டு. மணக்குடவரின் திருக்குறள் உரையைப் பரிப்பெருமாள் உரையாகக் காட்டியதுண்டு. இதே போன்ற மயக்கம் காலிங்கர் உரையிலும் நேர்ந்திருக்கின்றது. காலிங்கர் உரை கிடைக்காத சில இடங்களில், பரிதியார் உரையைக் காலிங்கர் உரையாகக் காட்டிப் பதிப்பித்திருக்கிருர்கள்.[16] குறள் 167, 168, 193, 194, 202, 203, 204, 205. 207, 209 210, 584-ஆகி யன இவ்வாறு காட்டப்பட்டுள்ளன. இவ்வுரைகளைக் காலிங்கர் உரை

15. திருக்குறள் காமத்துப்பால் பதிப்பு தி. பொ. பழனியப்பப் பிள்ளை-முகவுரை III
16. திருப்பனந்தாள் காசி மடத்துப் பதிப்புகள்.

www.thamizham.net - Free E book No 7427

யென்று கொள்வதைக் காட்டிலும் பரிதியார் உரை என்று கொள் வதே பொருத்தமாகத் தெரிகிறது. சொற்பொருள், சொல்நடை, சொல் லும் முறை இவற்றை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, காலிங்கர் உரை என்று இதனைக் கருதுவதற்கில்லை.

19.0: காலிங்கரைப் பரிமேலழகர் சுட்டும் இடங்கள்: பரிமே லழகர் தமக்கு முன்பிருந்த திருக்குறள் உரையையெல்லாம் நன்கு பயின்றவர். தமிழ்நூல், வடநூல்களையும் ஆராய்ந்து கற்றவர். தம்மறிவு வாய்ந்தவர். மதிநுட்பம் நூலொடு உடையவர். ஆகை யால் தான் குறளுக்கு வகுத்த உரைக்கு மாறாக இருப்பனவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவற்றைத் தனித்து எடுத்துக் காட்டு கிறார். வேற்றுரை காணும் பொழுது பிறிதோர் உரையை எடுத்துக் காட்டுவார். அவ்வுரை உடன்பாடு இல்லையெனில் மறுத்தும் உரைப் பார். தம் பார்வைக்குப் பொருத்தமில்லாத பாடங்களையும் சுட்டிக் காட்டி வேறு பாடம் பொருத்தமில்லாததையும் எடுத்துக் காட்டுவார். வேறுபாடம் பொருத்தமாயின் அதற்கும் உரை வகுப்பார். ஆகப் பரிமேலழகர் சுட்டிக்காட்டும் இடங்களை ஏழு வகைபாகப்பகுக்கலாம். அவையாவன:

19.1: I. 'என்று உரைப்பாரும் உளர்' எனக்கூறி வறிதே செல்லல்.

காலிங்கரைக் குறிக்குமிடங்கள்: *297, 337, 369, 586, 605, 606, 614, 627, 721, 728, 1094.*

II. பிறர் உரை காட்டி மறுத்தல். காலிங்கரைக் குறிக்குமிடங்கள் *334, 338.*

III. பிறர் உரை காட்டி ஏற்றுக்கொள்ளல். *காலிங்கரைக் குறிக்குமிடங்கள். 1178.*

IV. என்று பாடம் ஓதுவாரும் உளர் எனக்கூறி வறிதே செலல். காலிங்கரைக் குறிப்பன *339, 639, 821, 1013 ,1032.*

V. எடுத்துக்காட்டி எதிர்த்துரைத்தல்.
காலிங்கரைக் குறிப்பன: 501, 600, 1040, 1056.

VI. எடுத்துக்காட்டி ஏற்றுக்கொள்ளல்.
காலிங்கரைக் குறிப்பன: ஒன்றுமில்லை.

VII. பிறர் எல்லாம்என்ற தொகைச் சுட்டால் காட்டுதல்.
காலிங்கரைக் குறிப்பன: 638, 655, 817.

19.2: "எற்றென்று இரங்குவ செய்யற்க, செய்வானேல்,
மற்றன்ன செய்யாமை நன்று"-(655)என்ற

www.thamizham.net - Free E book No 7427

குறட்பாவிற்குப் பரிமேலழகர் சிறப்புரை எழுதும்போது, 'பிறரெல்லாம் இயைபற உரைத்தார்'. என்று கூறுகிறார். இங்கே அவர் கருதுவது, மற்றன்ன என்ற சொற்பொருள் பற்றியதாகும். அன்ன என்பதற்கு அவ்விரங்குதலை என்பது பரிமேலழகர் உரையாகும். "அத்தகு செயல்களை" என்பது, மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகியோரது உரையாகும். 'பிறரது இரங்குதல்களை' என்பது காலிங்கரது உரையாகும். பரிமேலழகர் தம்மையல்லாத பிறர் எல்லாரையும் (காலிங்கர் உள்ளிட்டுப்) 'பிறரெல்லாம்' என்று குறித்தாராதல் வேண்டும். இயைபற உரைத்தவர்கள் மணக்குடவர். பரிப்பெருமாள் ஆகியோரை என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கது. காலிங்கரும் இயைபற உரைத்தாரா என்பது ஆராயத்தக்கது. இதேபோன்று காமத்துப்பால் அவர் வயின் விதும்பல் (அதி. 127) என்ற அதிகாரத் தொடக்கத்திலும், 'பிறரெல்லாம்' என்று சுட்டுகிறார் பரிமேலழகர். இங்குக் காலிங்கரையும் அடக்கிக் கூறுகிறார் என்பது, காலிங்கர் கொண்ட உரைப்போக்கால் உறுதியாகின்றது.

19.3: பரிமேலழகர் பிறரைச் சுட்டிக்காட்டும் இடங்களில் பெயரைச் சுட்டிக் கூறாததால், பரிமேலழகர் சுட்டும் உரைகாரர் யாரென அறிதல் கடினமாக உள்ளது. எனினும் அவர் சுட்டும் மாற்றுரைகளும் பாட வேறுபாடுகளும் யாரால் கையாளப்பட்டுள்ளன என்பது, வேறு உரைகளையும் சேர்த்துப்பயிலும்போது, அவர்காட்டுவோர் யாரெனக் கருத முடிகிறது. இவ்வாறு கருதிய அளவில் பரிமேலழகர் குறிப்பிடும் உரைகளும் பாட வேறுபாடுகளும் இருபத்தைந்து காலிங்கர்க் குரியவை எனத் தெரிகிறது சில இடங்களில், காலிங்கருடன், மணக்குடவரும் பரிதியும் அதே உரையையோ பாடத்தையோ கொண்டுரைத்துள்ளனர். எனினும், 297; 337, 369. 605, 606, 627, 728, 1034 என்ற பாக்களுள் பரிமேலழகரால் சுட்டப்படும் உரை வேறுபாடுகளும், 501, 1056 என்ற பாக்களுள் சுட்டப்படும் பாட வேறுபாடுகளும் காலிங்கர்க்கே உரியவை என்பதில் ஐயமில்லை.

19 4: காலிங்கர் உரையை எடுத்துக்காட்டிப் பரிமேலழகர் மறுக்குமிடம் மிகச்சிலவே. 334, 338, 501, 660, 1040, 1056 என்ற பாக்களில், உரையில் மறுப்புரை தருகிறார். இவற்றுள் 501-ஆம் குறள் உரையில், காலிங்கர் உரைப்போக்கைக் கடுமையாகச் சாடுகிறார் பரிமேலழகர்.

www.thamizham.net - Free E book No 7427

"இவ்வடநூற் பொருண்மையை உட்கொண்டு, இவர் (திருவள்ளுவர்) ஓதியது அறியாது, பிறரெல்லாம் இதனை 'யிரச்சம்' எனப் பாடம் திருத்தித் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்' "என்றெழுதுகிறார் பரிமேலழகர். இக்குறளில் 'உயிரச்சம்' எனப் பாடம் ஓதிய உரைக்குரியவர் காலிங்கரே ஆவார். 'பாடந்திரித்தார்' என்றும், 'தத்தமக்குத் தோன்றியவாறு உரைத்தார்' என்றும் பரிமேலழகர் காலிங்கரை வன்மொழிகளால் குறிப்பிடுகிறார். ஆனால் இதே பரிமேலழகர் 614-ஆம் குறளில் வரும் 'பேடி கை' எனும் சொற்றொடர்க்குக் காலிங்கர் உரைத்த இரண்டாம் உரைக்கருத்தைப் பிறழாமல் போற்றிப் பின்பற்றுவதையும் காண்கிறோம்.

19.5: இவ்வாறுகப் பரிமேலழகர் உரை சுட்டி, உரைத்தனவும் மறுத்தனவும், பாடம் சுட்டி உரைத்தனவும் மறுத்தனவும், பிறரெல்லாம் எனத் தொகைசுட்டி உரைத்தனவும் மறுத்தனவும், காலிங்கருக்குப் பொருந்தி வருதலைக் காணுகிறோம். இதனால் காலிங்கர் பரிமேலழகருக்கு முந்தியவர் என்ற கருத்து மேலும் உறுதியாகின்றது.

20.0: **காலிங்கர் பிறரைச் சுட்டுமிடங்கள்:** காலிங்கர் தொடக்க உரையாசிரியர் என்னும்போது, அவர்காலத்தோ, அவருக்கு முன்போ வேறு உரைகள் இல்லை என்பது பொருளன்று. காலிங்கரே தம்காலத்திலிருந்த பாட வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுகிறார். ஆறு இடங்களில் வேறு உரைகளையும் நான்கு இடங்களில் வேறு பாடங்களையும் எடுத்துக் காட்டுகிறார். அவர் சுட்டிக்காட்டும் உரைகாரர்களையும் பாடவேறுபாடு கொள்வோர்களையும், முற்ற அறிந்துகொள்ள முடியவில்லை. எனினும் வெளிவந்துள்ள ஐந்து பழைய உரைகளைக் கொண்டு, கருதப்பட்டிருக்கிறது. அங்ஙனம் கருதப்பட்ட உரைகாரர்கள் காலிங்கர் காலத்து வாழ்ந்ததாகவோ, அவருக்கு முன் வாழ்ந்ததாகவோ, வரையறுத்துக் கூற முடியாது. காரணம் காலிங்கர் எந்த உரைகாரரின் பெயரையும் சொல்லிக்காட்டவில்லை. ஆதலால் இங்குக் கூறப்பட்டுள்ள செய்திகளைக் காலிங்கர் சுட்டிக்காட்டும் வேற்றுமைகளும், வேறுபாடங்களும் இவர்களின் உரைகளிலும், இருக்கின்றன என்ற அளவில்தான் கொள்ளுதல் வேண்டும்.

20.1. **உரைவேறுபாடுகள்:**

குறள்	காலிங்கர் உரைப்பகுதி	உரையால் கருதப்படும் [உரைகாரர்
288	கரவுஎன்றது களவு என்பாருமுளர்	தெரியவில்லை.
296	எய்யாமை அறியாமை என்பாருமுளர்	மணக்குடவர்.

www.thamizham.net - Free E book No 7427

317 மனத்தானும் என்பாரும் உளர். பரிமேலழகர்.

600 வெறுக்கை-வெறுப்பென்பாரும் உளர் தெரியவில்லை.

604 குடிமடிந்து என்பதனைச் சுற்றத்தார் மாய்ந்து என்பாருமுளர் } தெரியவில்லை.

பாட வேற்றுமைகள்:

980 பிறரொறு பாடம் ஓதுவார் உளர் என்னின் அதற்கு ஏற்குமாறு அறிந்துரைக்க } தெரியவில்லை.

1061 காவாது வந்தீயும் என்று பாடம் ஓதுவாரும் உளர் } தெரியவில்லை.

1313 தாளிப்பு என்பாரும் உளர் தெரியவில்லை.

1039 நிலம்புலந்து இல்லாளின் ஊடி வரும் என்பாரும் உளர். } பரிமேலழகர். மணக்குடவர். பரிப்பெருமாள். பரிதி.

20.2: இவர்காட்டும் பாடவேறுபாடுகளுள் 980-ஆம் குறள் பாட வேறுபாடு குறிப்பிடத் தக்கது:

"அற்றம் மறைக்கும் சிறுமை, பெருமைதான்
குற்றமே கொண்டு விடும்." என்பது ஒரு பாடம்.

"அற்றம் மறைக்கும் பெருமை, சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்." என்பது பிறிதொருபாடம்.

"அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்" என்பது பரிமேலழகர் பாடம்,

மூன்றிற்கும் எத்துணை வேற்றுமை என எண்ணிப்பாருங்கள். காலிங்கர் தம் காலத்தில் வழங்கிய உரைகளையும் நூற்களையும் பயின்றிருக்கிறார் என்பது மேற் சொன்னவற்றால் தெரிய வருகிறது.

21.0: காலிங்கர் உரையுள் காணப்படும் பாடவேறுபாடுகளின் [ஆய்வு:

வெளிவந்துள்ள ஐந்து திருக்குறள் பழைய உரைகளுள், மிகுந்த பாடமுடையது இதுவே என்று கூறலாம். இவ்வுரையுள் காணப்படும் பாடவேறுபாடுகளை மூலப் பாடவேறுபாடு, உரைப் பாடவேறுபாடு என்று இரண்டாகப் பகுத்துக் கொள்ளலாம். நூல் முழுவதும் நூற்று

www.thamizham.net - Free E book No 7427

எழுபத்தாறு மூலப் பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன அறத்துப் பாலில், பொருட்பாலில், காமத்துப்பாலில் என்று காணப்படுகின்றன. காலிங்கர் கொண்டுள்ள சில வேறுபாடுகள் சிறப்பாக இருத்தலைக் காண்கின்றோம்.

21.1: காலிங்கர் காட்டும் சில பாடங்கள் குறள் வெண்பாவின் தளையைச் சிதைக்கின்றன.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்" (1033)

என்ற குறளுக்கு 'மற்றல்லாதார்' என்பது காலிங்கர் பாடம். இவ்வாறு கொள்ளின் தளை தட்டுகிறது.

"அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு" (1154)

என்ற குறட்பாவில், 'என்றவர் நீப்பின்' என்பதற்குப் பகரமாக, 'என்ஞர் உரை நீப்பின்' என்று பாடம் எழுதுகிறுர் காலிங்கர். இப்பாடத்தால் தளை பிறழ்கிறது என்பது திருப்பனந்தாள் திருக்குறள் பதிப்பாசிரியர் கருத்து.

21. 2: காலிங்கர் உரையினுள்ளும் ஏறத்தாழ 64 பாட வேறுபாடுகள் பதிப்பாசிரியர்களால் கண்டறியப் பட்டுள்ளன. கால் நீட்சியில் ஏடெடுத்து எழுதுவோரால் ஏற்பட்ட விளைவாகும்.

22.0: காலிங்கரின் பலதுறை அறிவாற்றல்:

கலை நுகர்வு: கூத்துக்கலை நூற்களை இவர் அறித்திருந்தார். சுருதி, மிருதி, புராணம் இவற்றையும் இவர் எடுத்தாளுகிறுர். வடநூலமைப்பைக் குறளமைப்போடு கூட்டிக் காட்டுகிறுர். பாரத-இராமாயணக் கதைகளை அறிந்திருந்தார்.

22.1: படை அறிவு: மழவர்கள் கையாண்ட கருவிகள் பலவற்றைக் காட்டுகின்றுர். கல்பொறி, பாம்பு, கனல், கடிகுரங்கு, விற்பொறி, வேல், வெந்தீவட்டு, காய்ச்சிய மணல், கவ்வு, இருஉலக்கை, வீச்சுறு தூண்டில், விசைத்தெறி, கவண் (749) கருவிகளின் தொழில் திறனுவன. சுற்றுதல், எரிதல், நீட்டுதல், நிமிர்த்தல், வெட்டுதல், என்று சுட்டிக்காட்டுகிறுர். (253)

நாட்டு அரண் பலவகைப்படும். அவையாவன: வில்லரண், வேலரண். தூக்கரண், வியூகச்சிறை (560) என்று காட்டுகிறுர்.

www.thamizham.net - Free E book No 7427

பல மழவர்கள் ஒன்னார்களுக்குத் துன்பம் தரும் வகைகள்: கட்டுதல், கடுத்தல், எற்றுதல், எறிதல் என்று (586) காட்டுகிறார்.

22.2: சோர்வுகளை நான்கு வகைகளாக எடுத்துக்காட்டுகிறார்: உணர்ச்சிச் சோர்வு, கண்சோர்வு, உடல்சோர்வு, உடைச்சோர்வு. [930]

22.3: இவரது தெளிந்த மருத்துவப் புலமை, குறளுரை 949 950[17]. இவற்றால் தெரிய வருகிறது.

23.0: ஆக இக்கட்டுரையால் அறியப்பெறும் செய்திகள் இவைதாம்.

23.1: காலிங்கர், காளிங்கர் என்பவற்றுள் காலிங்கரே பொருத்தம்.

23.2: காலிங்கரின் சொந்தநாடு சோழநாடு.

23.3: வாழ்ந்த காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு.

23.4: சார்ந்த சமயம் சமண மாகலாம்.

23.5: இயல்பகுப்பில் தமக்கெனச் சில வேறுபாடுகளை உடையவர். இயல் விளக்கம், அதிகார விளக்கம், அதிகார உட்பகுப்புகளைத் தராதவர்.

23.6: வரும் அதிகாரத்திற்கும், நிகழ் அதிகாரத்திற்கும் உரிய தொடர்பை, நிகழ் அதிகாரக் கடைசிப் பாவில் காட்டுபவர்.

23.7: திருவள்ளுவர், காலிங்கர் உரைப்படி கடைசி 1330-ஆவது குறளாக னகர இறுதி (ஊடுதல்...எனத் தொடங்கும்) குறளை வைத்திருக்க வில்லை.

23 8: விரிந்த சிறப்பு உரையமைப்பு இல்லை.

23.9: அகரமுதலி போலச் சொற்பொருள் விளக்கம் காட்டுவர்.

23.10: தனித்தமிழ் நடையர் என்ற கருத்துச் சரியன்று.

23.11: பல குறட்பாக்களுக்கு உரையில்லை.

23.12: பல குறட்பாக்களுக்குத் தனியுரை தந்தவர்.

(முற்றும்)

---

17. காட்டப்படும் குறள் வரிசை எண்கள், பரிமேலழகர் முறை வைப்பைப் பின்பற்றியன. காலிங்கர் முறைவைப்பைப் பின்பற்றியன அல்ல.

www.thamizham.net - Free E book No 7427

மீன்களின் வண்ணம்

சி. தமிழ்வென்றி, (அறி. இ.) நெல்லை.

கண்ணுக்கினிமையாகத் தோன்றும் வண்ணங்கள் எண்ணிறந்தன. இயற்கையின் வியப்பான படைப்புகளில்-வெளிப்பாடுகளில்-இவ்வண்ணங்களின் பங்கும் அத்தன்மையதே! பல்வேறு உயிரிகளும் தத்தம் சுற்றுச் சூழலுக்கேற்பப் பல்வேறு வண்ணங்களையும் வடிவங்களையும் பெற்று வாழ்கின்றன. இக்கட்டுரையின் வழி வண்ணங்கள் மீன்களில் வாகுற அமைந்திருத்தலையும், அவற்றின்வழி மீன்கள் காப்பமைவு பெறுதலையும் காண்போம்.

வண்ணமும், வாழ்வும்: வடிவத்தினையும், வாழ்க்கைச் சூழலையும், பழக்க வழக்கத்தினையும் போன்றே மீன்களில் அவற்றின் வண்ணமும் வாழ்க்கைப் போரில் (Struggle for Existance) தப்பியுயிர்வாழ வழிசெய்யும் வண்ணம் காப்பமைவாக (Adoptation) அமைந்துள்ளது. இவ்வண்ணங்கள் இயைபியல் வேதியற் கரணியங்களால் (Physical & Chemical factors) அமைகின்றன. ஆற்று நீரிற் காணப்படும் சிலவகை மீன்களே வெண்ணிறத்தவைகளாயமைந்துள்ளன. பெரும்பாலான மீன்கள் பலவண்ணங்களுடன் மிளிர்கின்றன. என்புடைமீன்கள் (Bony Fishes) பிறவற்றினின்றும் மிகு வண்ணங்களுடன் விளங்குகின்றன. மீன்களின் வண்ணங்களுக்கு நிறமிகள் (Chromatophores) ஒண்மங்கள் (Iridocytes) ஆகியவையே கரணியங்களாம்.

நிறமிகள்: மீன்களின் உட்தோலில் அமைந்து பல நிறங்களையாக்கும் அணுக்கள் நிறமிகள் எனப்பெறும். அவை கறுப்பாக்கிகள் (Melarophores) வண்ணமாக்கிகள் (Lipophores) என இருவகைப்படும். முன்னவை தோலைக் கருநிறமாக்கும் அணுக்களையும், பின்னவை சிவப்பு, மஞ்சள், போன்ற நிறங்களைத்தரும் அணுக்களையும் குறிக்கும். இவ்வண்ணம்பெறும் தன்மைக்கு அவற்றின் இலை, தழை போன்றவற்றை யுண்ணும் பழக்கமும் ஒரு கரணியமாகும்.

ஒண்மங்கள்: எவ்வித வண்ணத்தையும் வழங்காமல் ஒளிரும் தன்மையை மட்டும் கொண்டு மிளிரும் இவ்வொண்மங்கள் வெள்ளிமம் (Guanin) என்னும் வெள்ளிப் பளிங்குப் பொருளைக் கொண்டுள்ளன. நிறமிகளோடிணைந்து ஒண்மங்கள் வெண்மைத் தன்மையளிக்கின்றன. இவற்றாலேற்படும் நிறத்தினை வெண்மை யென்பதைவிட

www.thamizham.net - Free E book No 7427

வெள்ளிய மென்பதே பொருந்தும். இவ்வொண்மங்கள் மஞ்சள்நிற வண்ணமாக்கிகளோடிணைந்து நீலநிறத்தை மீன்களுக்களிக்கின்றன.

வண்ணத்தன்மை: பெரும்பாலான மீன்கள் பலவண்ணமுடை யவையாயுள. இவ்வண்ணங்கட்குக் காணியமான நுண்ணியங்கள் (Cells) குவிந்திறுகியோ அன்றிச் சிதறியோ அமைந்திருக்கலாம். இவை திரண்டும் அடர்ந்தும் இருப்பின் வண்ணம் மிகத் திண்ண மாகவும், சிதறலாயிருப்பின் வண்ணச் சிதறலாய் உடல் மிளிர்ந்தும் விளங்கும். என்புடை மீன்கள் பிறவற்றினின்றும் விரைவாகவும், முழுமையாகவும், எளிதாகவும் நிறத்தை மாற்றிக் கொள்கின்றன. இவ்வணுக்கள் நரம்புகளோடியைந்தவை. கபச்சுரப்பியின் அடிப் பகுதியிற் சுரக்கும் ஒருவகைப் பாய்மம் (Fluid) இவ்வண்ணமாக்கி களோடு தொடர்புடையது. சுற்றுச் சூழலும் மீன்களின் நிறத்தை யமைப்பதில் பங்குடையது. வண்ணத்தால் மீன்களடையும் பயனைக் கருதி மீன்களின் வண்ணங்கள் முத்திறத்தவையாய்ப் பகுக்கப்பட் டுள்ளன. அவை எச்சரிக்கை வண்ணம் எனப் பெறுகின்றன.

எச்சரிக்கைவண்ணம்: பளிச்செனத் தெரியும் வண்ணம் அமைந் துள்ள வண்ணம் எச்சரிக்கை வண்ணமாகும் (Sematic or Warning Colour) இவ்வண்ணம் பெரிதும் சுவையற்ற மீன்களிலும், தற் காப்பிற்கெனக் காப்புறுப்புகளைப் பெற்றுள்ள மீன்களிலும், நச்சுச் சுரப்பிகள், முட்களுடைய மீன்களிலும் அமைந்துள்ளது. இவை பெற் றுள்ள வண்ணத்தால் இரைதேடிகளும் (Predators) பிற சிற்றுயிரி களும் சிறுமீன்களும் எச்சரிக்கை பெறுவதால் இவ்வகை மீன்கள் பெற்றுள்ள வண்ணம் எச்சரிக்கை வண்ணம் எனப்படுகிறது.

மறைப்பு வண்ணம்: எச்சரிக்கை வண்ணத்தைப் போலாது மீன் களை அவற்றின் சூழலினின்றும் பிரித்தறிய வியலாதவாறு மறைப்புத்தரும் வண்ணமே மறைப்புவண்ணம்(Cryptic or Concealing Colour) என்றழைக்கப்படுகின்றது. சிலவகையான மீன்களின் உடலில் முதுகுப்புறம் (Dorsal side) கருநிறமுடையதாகவும் வயிற் றுப்புறம் (Ventral side) வெண்ணிற முடையதாகவும் விளங்கக் காணலாம். இத்தகு நிறத்தால் அம்மீன்கள் முறையே பறவைகளி னின்றும் நீர்வாழ் உயிரிகளினின்றும் காப்புப் பெறுகின்றன. எவ் வாறெனில், பறவைகள் வானினின்று பார்க்குங்கால், நீரில்நீந்திடும் மீன்களின் முதுகுப்புறம் கரிய நிறமுடன் நீரின் நிறத்தினின்றும்

www.thamizham.net - Free E book No 7427

வேறுபடாது விளங்குமாகையால் அவற்றால் மீன்களைக் காண வியலாது. அதேபோன்று நீரின்மேற்பரப்பில் நீந்திடும் இம்மீன்களின் வயிற்றுப்பகுதி விண்ணின் நிறத்தையொத்து விளங்குவதால், அடிப் பரப்பிலுள்ள பிற உயிரிகள் இம் மீன்களைக் காணவியலாது போகின்றன. இவ்வாறு இம்மீன்களின் வண்ணம் எதிரிகளினின்று தப்பிடும் வண்ணம் மறைப்புத் தருவதால் இவை மறைப்பு வண்ணம் எனப்படுகிறது.

பவளக் கலைகளருகில் வாழும் மீன்கள் பெருமளவில் கண்ணைப் பறிக்கும் பளிச்சிடும் வண்ணங்களுடனுள. இவ்வண்ணங்களாலும் அம்மீன்கள் சூழலுக்கேற்ற நிறமே பெறுவதால் இதுவும் மறைப்புத் தந்து மீன்களைக் காக்கின்றன. பல மீன்கள் சூழலுக்கேற்றபடி வண்ணத்தை மாற்றிக்கொள்ளும் ஆற்றலுடையவையாயுள. கடற்குதிரை (Pipefishes) யெனப்படும் மீன்கள் நீர்ச்செடிகளைப் போன்றேயுள.

பால்வண்ணம்: பாலுக்கேற்ப அமைவுற்றுப் பிற மீன்களைக் வரும் வண்ணமமைவது பால்வண்ணம் (Epigamicor Sex colour) எனப்படும். ஆண்மீன்களே பெண்மீன்களைவிட வண்ணம்பெற்று விளங்குகின்றன, புணர்ச்சிக் காலத்தில் மிகத் தெளிவாக விளங்கி இவ்வண்ணம் பெண்மீன்களைக் கவர்கிறது. பலவற்றில் இவ்வண்ணமானது புணர்ச்சிக் காலத்தில் உடலிலேற்படும் உணர்ச்சிகட்கேற்பத் தோன்றினும் சிலவற்றில் ஆண், பெண் மீன்கள் வெவ்வேறு வண்ணங்களுடனேயே எப்பொழுதும் விளங்குகின்றன. ஒண்மநுண்ணியங்களின் ஒளியை எதிரொளி செய்யும் தன்மையாலும் மீன்கள் வண்ணம் பெறுகின்றன.

நிறமின்மை (ALBENISM): வண்ணமாக்கிகளின் வளர்ச்சியின்மையால் சில மீன்கள் நிறமற்றும் விளங்குகின்றன. நீர்முழைஞ்சுகளில்-கடலின் ஆழ்நீரோட்டப் பகுதிகளில்-முழைஞ்சுபோன்ற இருட் பகுதிகளில்-வாழும் மீன்கள் இத்தன்மையனவாயுள.

வாழ்க்கைப் போரில் வென்றிடத்தக்க வகையில் ஒவ்வோருயிரியும் காப்பமைவுகளைப் பெற்று வாழ்கின்றது. அவ்வகையில் மீன்களின் வண்ணம் அவற்றிற்கு இயற்கையின் அருட்கொடையே என்றால் மிகையில்லை! O

www.thamizham.net - Free E book No 7427

தனிம அகர வரிசை.

—இல. க. இரத்தினவேல். க. மு.

குறியீடு 1	தனிமம் 2	அணு எண் 3	Element 4	Symbol 5	வேர்ச்சொல் காரணிய விளக்கம் 6
கடெ	கடெலினியம்	64	Gadolinium	Gd	பின்னிய இயைபியலறிஞர் கடெலின்
கத	கத்தரிதை	53	Iodine	I	கத்தரிப்பூ நிற ஆவியை உமிழும்.
கதி	கதிரம் (ஆரயம்)	88	Radium	Ra	முதன்முதலிற் கண்ட கதிரியக்க மாழை' காண்க: ஆரகன்.
களி	கதிரொளியம்	89	Actinium	Ac	எல்லா மீநிறையணுக்களும் (Isotopes) கதிரியக்கம் உடையன.
க	கரி	6	Carobn	C	கரி > E. Char coal
கல்	கல்லி	14	Silicon	Si	எல்லாக் கற்பாறைகளிலும் பெரும்பகுதியாயுள்ள தனிமம்.
கலி	கலிபோர்னியம்	98	Californium	Cf	கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்திற் பெறப்பட்டது.
காத	காந்தகம்	25	Manganese	Mn	காந்தம் (L. Magnesia-Magnes) என்ற வேர்ச்சொல்.
காமி	காமியம்	23	Vanadium	V	காமி (Vanadis) என்ற சிறு தெய்வம்
கா	காலகை	7	Nitrogen	N	கால் (காற்று)-இல் 5-இல் 4 பங்கு உள்ளது.
காரீ	காரீயம்	82	Lead	Pb	கார் + ஈயம் (இள் ≈ இளகு — இய் — ஈயம்); எளிதில் இளகும் கரிய மாழை.
கி	கியூரியம்	96	Curium	Cm	கதிரத்தைக் கண்ட கியூரிகளின் நினைவைக் குறிக்கும் மாழை.
கு	குண்டம்	92	Uranium	U	அணுச்சிதைவாலான அணுக் குண்டுக்குப் பயன்பட்ட தனிமம்.

www.thamizham.net - Free E book No 7427

1	2	3	4	5	6
குரு	குருமியம்	24	Chromiun	Cr	கூட்டுப்பொருள்களின் குரு(> Gk. Chroma = நிறம் குறிப்பிடத்தக்கது.
கெ	கெலியம்	31	Gallium	Ga	கேலியா (பிரான்சு) நாட்டு லிகாக் (= L. gallus) தி பாய்சுபத்திரன் கண்ட மாழை.
கே	கேவ்னியம்	72	Hafnium	Hf	கோப்பன்கேசம் (- L. Hafnia) பேராசிரியர் காசுட்டா, கீவ்சே கண்ட தனிமம்.
கொ	கொலம்பியம்	41	Columbium	Cb	கொலம்பியா.
கோ	கோயம்ளி	58	cerium	ce	குறுங்கோள் ceres.
சுகே	சுகேந்தியம்	21	Scandium	Sc	கேண்டிநேவியா (Scandinavia)
சு	சுண்ணம் (காளம்)	20	calcium	ca	சுண்ணும்பில் உள்ள மாழை, காளம் < L. calx.
சுல்	சுல்லம்	78	Platinum	Pt	சுல்-சுல்லு = வெள்ளி—வெண்ணிற மாழை.
சுரு	சுற்ருந்தியம்	38	Strontium	Sr	Strontian-இல் காணப்பட்ட மாழை.
செ	செம்பு	29	copper	cu	செம்பொன்—செம் ≈ செந்நிற மாழை.
செமே	செமேரியம்	62	Samarium	Sm	செமர்கைட் (Samarskite)- இல் கண்டு, உருசிய அறிஞர் செம்மேர்க்கி (Samarski)-யின் நினைவாகச் சூட்டப்பட்டது.
செய	செயற்கம் (மெசூரியம் மெசூ)	43	Technetium (Masurium-Ma)	Tc	செயற்கையிற் பெற்ற முதல் தனிமம்; மெசூரியாவிற் கண்டதாகவும் சொல்லப்பட்டது.
செர்	செர்மானியம்	32	Germanium	Ge	கிளமன் விங்லேர் என்ற செருமானியர் கண்ட மாழை.
சே	சேணியம்	93	Neptunium	Np	சேணியன் = வாரணன் (Neptune); சேய்மையில் உள்ளது.
சோ	சோரிதை	35	Bromine	Br	சோரி—செந்நிற நீர்மம்.
த	தங்கம்	79	Gold	Au	தகதகவெனச் சொலிக்கும் மாழை; தகு-தங்கு-தங்கம்.

www.thamizham.net - Free E book No 7427

1	2	3	4	5	6
தளி	தளிரம்	81	Thallium	Ti	நிறமாலையில் தளிர் (> Gk. Thallos)ப் பச்சை வரிகள் உள.
தி	திண்மியம்	76	Osmium	Os	திண்ணிய—உச்ச எடையுள்ள மாழை. ஒப்படர்த்தி 22.5.
தூ	தூலியம்	69	Thulium	Tm	காண்டிநேவியா (= L. Thule; Gr. Thoule).
தூவா	தூவாயம்	40	Zirconium	Zr	தூய்மையான நிலையில் யாண்டும் கிடைப்பதில்லை. தூய × தூவா.
தெ	தெர்பியம்	65	Terbium	Tb	இத்திரிய கனிப் பொருளில் கிடைத்தது. இத்தெர்பியத்தைக் காண்க.
ந	நஞ்சம்	33	Arsenicum	As	நச்சுத் தன்மை மிக்கது.
நா	நாகம்	30	Zinc	Zn	துத்த நாகம்.
நி	நிலையிலம்	85	Astatine	At	நிலையிலி (Gk. a statos)
நீ	நீரியம்	1	Hydrogen	H	நீரின் மூலக்கூறு Gk. hydor + gennaein. எதிலும் அடங்கா வம்பத்தனிமம்.
நீல	நீலமம்	55	Caesium	Cs	நிறமாலையில் நீல வரிகள் உள்ள கார மாழை.
நீறி	நீறிமம்	19	Potassium	K	நீற்றில் [ash (in pot—Potash—இல்] இருந்து பெறப்பட்டதாம்!
நோ	நோபெலியம்	102	Nobelium	No.	தாக்கோம் (stockholm) நோபெல் கழகத்தில் செயற்கையாய் உண்டாக்கப்பட்டது.
ப	பசியம்	59	Praseodymium	Pr	இம்மாழையின் உப்புகள் பசிய (> Gk. Prasios) நிறமுடையன.
பா	பாசதை	17	Chlorine	Cl	பசு மஞ்சள் நிறம்.
பாரி	பாரியம்	56	Barium	Ba	பாரம் (> Gk barys = heavy) மிக்க மாழை.
பி	பிரெஞ்சியம்	87	Francium	Fr	பிரெஞ்சு நங்கை மில்லி பெரி (Mlle Perey) யால் கண்டுபிடிக்கப்பட்டது.

www.thamizham.net - Free E book No 7427

1	2	3	4	5	6
பு	புகரி	5	Boron	B	புகர் நிறம்.
புன்	புதியன்	10	Neon	Ne	புது (Gk. neos = new) என்ற சொல்.
பூ	பூசியம்	28	Nickel	Ni	மின் பூச்சுகளுக்கு மிகுதியாய்ப் பயன்படும் மாழை
பூதி	பூதவேதியம்	42	Molybdenum	Mo	பொன்மத்தின்—இரும்பின் பூதவியற் பண்பு-களையும் அன்மத்தின் இயைபியற் (வேதியற்) பண்புகளையும் கொண்டது.
பெலி	பெர்ஃலியம்	97	Berkelium	Bk	பெர்ஃலியில் உண்டாக்கப்பட்ட தனிமம்.
பெர்	பெர்மியம்	100	Fermium	Fm	இத்தாலிய அணுவியலறிஞர் என்ரிகோ பெர்மி
பொ	பொலனியம்	84	Polonium	Po	போலந்து (— L Polania) நாட்டுக் கியூரி, அம்மையார் கண்டது.
மக	மகனீசியம்	12	Magnesium	Mg	மெகனீசியா
ம	மஞ்சி	16	Sulphur	S	மஞ்சள் நிறம்.
மண்	மண்ணியம்	52	Tellurium	Te	மண்—ஞாலக்கோள் (= L. tellus).
மதி	மதி	34	Selenium	Se	மதி (Gk-Selene).
மூன்	மும்மியன்	36	Krypton	Kr	வெளிமண்டலத்தில் மும்மி (பக்கத்தில் ஒன்று) அளவு உள்ள அருவளி.
மு	முற்கதியம்	91	Protactinium	Pa	இதன் கதிர்வீச்சுச் சிதைவால் கதிரொளியம் உண்டாகிறது; கதிரொளியத்திற்கு முன்னைய மாழை.
மெ	மெண்டெலீயம்	101	Mendelevium	Md	தனிமப்பட்டியலை அமைத்த உருசிய அறிஞர் மெண்டலீவ்.
வ	வழியதை	9	Flourine	F	வழி (L. fluo = flow) என்ற வேர்ச்சொல்.
வன்	வன்மியம்	22	Titanium	Ti	வன்மை மிக்கது; ஈஃகு வன்மை தரப்பயன்படும் மாழை.

www.thamizham.net - Free E book No 7427

1	2	3	4	5	
வா	வாலரம்	83	Bismuth	Bi	வால்+அர்+அம்—செவ்வெண்மை நிற மாழை.
வி	விண்மம்	46	Palladium	Pd	விண்கோள் Pallas
வெண்	வெண்ணீலம்	51	Antimony	Sb	வெளிர் நீல நிற மாழை.
வெமி	வெண்மியம்	48	Cadmium	Cd	வெண்மை நிற மாழை.
வெ	வெள்ளி(சுல்)	47	Silver	Ag	சுல்—சுல்சு [> E. Silver]=வெள்ளி
வெளி	வெள்ளீயம்	50	Tin	Sn	காரீயத்தைக் கருத மிக வெண்மை.

(—முற்றும்.—)

உ. தம. க. விற்கென ஒரு கொள்கை முரசம்

முதன் மொழி

ஆசிரியர் : பேரா. தி வை. சொக்கப்பனுர், க. மு.

தனியிதழ்: 20 காசு. ஆண்டொப்பம்: 2-50.

முதன்மொழி

'தமிழ்க்குடில்', அளகாபுரம், சேலம்-4.

தனித்தமிழ் வளர்க்கும் புதிய ஏடு.

அறிவு

திங்கள் ஈரிதழ்.

ஆசிரியர் : பேரா. மு. தமிழ்க் குடிமகனுர். க. மு.

தனியிதழ் 25 காசு. ஆண்டொப்பம் 6-00.

தேவைக்கு எழுதுக.

அறிவு

அல்லி அச்சகம், கோரிப்பாளையம்-மதுரை-2.

நினைவில் வையுங்கள்!

தனித்தமிழ் வளர்க்கும் இலக்கிய ஏடுகள்

மாணிக்கன். தரங்கம்பாடி.

பூஞ்சோலை. காரைக்கால்-1.

ஆண்டுக் கட்டணம்
ஒவ்வொன்றுக்கும் 3 உருபா.
தனியிதழ் ஒவ்வொன்றும் 25 காசு.

இன்றே உறுப்பினராகுங்கள்.

பாவலர் பெருஞ்சித்திரனுரின் *'அறுபருவத்திருக்கூத்து' எனும் அரிய இலக்கியத்தைப் 'பூஞ்சோலை'யில் படியுங்கள்!*

www.thamizham.net - Free E book No 7427

வானூர்தியின் வளர்ச்சி

பா. திருநாவுக்கரசு, இ. பொ.
(எந்திரவியல்)

ஒலியின் விரைவை மிஞ்சும் வானூர்திகளை இக்கால் உருவாக்கி அதன் முழுப் பயனையும் பெற உள்ளது மாந்த இனம். நம் முன்னோர்கள் நீண்ட காலத்திற்கு முன்னரே கண்டறிந்து, பயன்படுத்தி வந்தனர் என்பதனையும் நாமறிவோம். வான் வழியாகவும் செல்ல முயன்று, வெற்றி பெற்று, அதன் பயனை முழு அளவில் பெற்று வரும் நமக்கு இவ் வான்வழிச் செலவு தொடங்கியது, வெற்றி பெற்றது, வளர்ச்சியுற்றது போன்றவற்றை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாதலின் அதுபற்றி ஈண்டுக் காண்போம்.

தொடக்கம் : வானில் பறக்கும் பறவையைக் கண்டே நம் முன்னோர்களும் மேலெழுந்து வானில் பறக்கும் ஆசையினைக் கொண்டிருந்தனர் என்பதனை நம் பகுத்தறிவால் அறியலாம் பறவையின் இறகுகளைக் கண்டு அது போன்று தானும் இறகுகளை உடம்பில் கட்டிக்கொண்டு பறக்க முயற்சி செய்து, கீழே விழுந்தது முயற்சியின் 'முதலடி' யெனினும், பின்னர் பெருமுயற்சி செய்து இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே [கி. பி. 1903] வானூர்தியில் வானவெளியில் பறந்து சென்று அமெரிக்க மாந்தர் வெற்றி பெற்றனர். தொடர்ந்து அறிவியல் தொழில் நுட்பத் துறையில் நிலை இறக்கை காற்றியக்கவியல் [Fixod Wing Aerodynamics] மிகு வளர்ச்சி பெற்றமையால் இக்கால் மீஒலிச் [supersonic] செலவு வானூர்திகளின் செய்பாடு மிகுந்து உலகைச் சுருங்கச் செய்து வருகின்றது.

வழிச்செலவு, போர், வெள்ள மேலீட்டால் இக்கட்டான நிலையில் பேருதவி புரியும் வானூர்திகளான முறையே செலவு வானூர்தி, போரூர்தி [Fighter], திருகிறக்கை ஊர்தி [Helicopter] போன்றவற்றின் வளர்ச்சியினை நோக்குவோம்.

முதல் வானூர்தி : கி. பி 1903-ஆம் ஆண்டு, திசம்பர் 17ஆம் நாளன்று விசை அமைந்த [powered] வானூர்தியில் திரு. ஆர்வில், திரு. வில்பர்டு என்ற உடன் பிறந்தோர் இருவரும் அமெரிக்க நாட்டிலுள்ள 'கிட்டி ஆக்கு' என்ற ஊரில், கட்டுப்படுத்திய பறத்தலை [Controlled flight] நிகழ்த்தி, வானை வெற்றி கண்டனர். ஆயிரம் ஆய்வுப் பறத்தலை [Experimental flights] நிகழ்த்திய பின்னரே வெற்றி கிட்டியதெனினும் 12 நிமையங்களில் 35 சீரடி [மீட்டர்]

www.thamizham.net - Free E book No 7427

தொலைவை அம் முதல் வானூர்தி கடந்தது. இம் முதல் வான்வெற்றிக்கு முன்னர் பலர் முயற்சி செய்து விசையமையாச்சறுக்கு வானூர்தி[Glider]யில் பறந்து வெற்றிக்கு வழிகோலினர் எனினும், விசையமைப்புடன் பறந்த் திரு. ஆர்வில்லும் திரு வில்பர்டுமே முதலில் வானை வெற்றி கொண்டவர்களாகக் கருதப்படுகின்றனர்.

இங்கிலாந்து. செருமனி, பிரான்சு நாட்டவர்களின் முயற்சி: முதல் வான வெற்றிக்கு முன்னர், கி. பி 1891ஆம் ஆண்டு, திரு. ஆட்டோ இலிலியெந்தல் என்பார் சறுக்கு வானூர்தி[பொறியின்மையால் விசையமையாதது]யில் தம் உடலியக்கத்தைக் கொண்டு ஊர்தியைக் கட்டுப்படுத்தி 230 சீரடி [மீட்டர்] தொலைவு பறந்தார். அவ்வெற்றியைப்பற்றி அவருடைய மாணுக்கரான திரு. ஆக்டேவ் சானூட் எழுதிவைத்த குறிப்புகளைத்தும் திரு. ஆர்வில், திரு வில்பர்டுக்கு ஊக்கமளித்து வெற்றி காண வழிகோலியன.

செருமானியர்க்கு முன்னர் திரு. சார்ச்சு காய்லே என்ற இங்கிலாந்து நாட்டவர், [பட்டம் காற்றுடி] போன்ற இறக்கையைக் கொண்ட சறுக்கு வானூர்தியினை கி. பி. 1804இல் வடிவமைத்தார். இவ்வூர்தி இன்றும் இலண்டனிலுள்ள அறிவியல் காட்சியகத்[Science Museum]தில் வைக்கப் பெற்றுள்ளது. இதற்கு முன்னர் காற்றுப்பந்தில் [baloon] மாந்தன் பறந்து செல்ல கி. பி. 1783ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டவர்கள் முயற்சி செய்தனர். கி.பி. 1500ஆம் ஆண்டில் திரு. இலியனோர்டா டாவின்சி என்ற இத்தாலிய நாட்டுப் பேரறிவியலறிஞர் பறவைகள் பறப்பதனையொட்டி கை கால்களைக் கொண்டு அசைத்துச் செல்லும் ‘பறவையூர்தி’’ [ornithopter] என்ற பொறியினைக் கண்டறிந்தார்

ஓரிறகு வானூர்தி. முதல் வானவெற்றிக்குப் பிறகு பிரான்சு நாட்டவர்கள் ஓரிறகு கொண்ட வானூர்தியினை வடிவமைத்து, ஊர்தி வளர்ச்சிக்குத் தங்கள் பங்கினைக் செலுத்தினர். தொடர்ந்து அந்நாட்டினரும் வானூர்தி வளர்ச்சியில் மிக ஈடுபாடுகாட்டி வந்தனர்.

ஆங்கிலக் கால்வாயைக் கடத்தல்: கி. பி. 1909ஆம் ஆண்டில் திரு. உலூயி பிளேரியட் என்பவர் அதற்கு முன்னர் ஏற்பட்ட இடரிலிருந்து முழுதும் குணமுறா நிலையிலும் தினச் காட்டியின் உதவி

www.thamizham.net - Free E book No 7427

யின்றி பிளெரியட் 11இல் பறந்து ஆங்கிலக் கால்வாயைக் கடந்தார். ஓரிறக்கை கொண்ட இவ்வானூர்தியின் வெற்றியைக் கண்டு வான் வழிச் செலவு விரைவில் நிகழுமென்பதனை மக்கள் அறிந்து மகிழ்ந் தனர்.

பிரிட்டனில் வளர்ச்சி: பொறி அமைத்த ஊர்திகளில் பறப் பதில் பிரிட்டன் நாட்டவர்கள் நாட்டம் மிகக் கொண்டு, முயற்சி செய்ததில், கி. பி. 1907ஆம் ஆண்டில் திரு. ஒரேசியோ பிலிப்சு என்பவர் ஆய்வுப் பறத்தலை [Test flight] நிகழ்த்தினர்.

வான் செலவுத் தொடக்கம்: வானூர்தி இடையூறில்லாதது என்பதனை அறிந்து, வானூர்தி செய்வினைத் தொழிற்சாலைகள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் கி. பி. 1910இல் தொடங்கப்பெற் றன. புதிய வானூர்தி நிலையங்களும், வான் பயிற்சிப் பள்ளி [Flying School]களும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நிறுவப் பெற்றன. பிரான்சு, அமெரிக்கா, பிரிட்டன் தவிர மற்ற சில நாடு களும் வானூர்தி வடிவமைப்பில் பேரார்வம் காட்டி வானூர்திகளைச் செய்யத் தொடங்கின. அதில் செருமானிய நாட்டு திரு. ஊகோ சங்கர்சு [Hugo Junkers] உருசிய நாட்டு திரு. ஐகார சிகோர்கி என்பவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். பகட்டுப் பறத்தல் [Stunt flying] பெருவழக்கானதாலும், பிரான்சு நாட்டு வானோட்டியான திரு. அடால்பே பெகௌடு 'வான் ஆட்டம்' [Aerobatics] செய்தமை யாலும் முதல் உலகப் போரில் வானூர்திகளைப் பயன்படுத்தினர், போரில் ஊர்திகளை இயக்க, சிறப்பு மிக்க வானோட்டிகளைப் "போர் வானோட்டி" [Fighter Pilots]களாக அமர்த்தினர்.

போர் வானூர்திகள்: ஐரோப்பிய நாட்டினர் போர்க் கருவியாக வானூர்தியைப் பயன்படுத்தும் வழியினை அறிந்தமையால் 1913இல் பி. ஈ. 2, சாப்வித்து டெப்லாய்டு, ஆவ்ரோ 500, ஆண்ட்லி பேசே, போலந்து எசு. இ. 4 [Page Folland S. E. 4] என்ற வானூர்திகளை பிரிட்டன் நாட்டவர் செய்து முடித்தனர். உருசியாவில் திரு. ஐகோர் சிகோர்கி, நான்கு பொறிகளமைந்த வானூர்தியினை உலகிலேயே முதன்முதலாக வடிவமைத்தார். இதன் மேம்பட்ட உருத்திரிபு [improved version] முதல் உலகப்போரில் குண்டூர்தியாக [bom- ber] பயன்படுத்தப்பட்டது.

பறக்கும் குழாம்: [Flying Club[: வானில் பறத்தல் மக்களி டையே செல்வாக்குப் பெறத் தொடங்கியதும், 'பறக்கும்

www.thamizham.net - Free E book No 7427

குழாம்' 1920இல் நிறுவப்பெற்றது. இதனை ஊக்குவிக்க பிரிட்டனின் வான் அமைச்சகம் [Air Ministry] செயலெளிமை [light] யான வானூர்தியை வடிவமைப்பதில் சிறந்தோர்க்குப் பரிசளிக்கக் கருதியது. திரு. பியர்ட்மோரு வீபீ [Beardmore Wee Bee] என்பார் கி. பி. 1924-இல் இப் பரிசினைப் பெற்றார். மிகச் சிறிய, புகழ் பெற்ற டி ஆவிலாந்து மாத்து எனும் ஈர் இறக்கை, வானூர்தி கி. பி. 1925-இல் முதலில் பறந்தது. இவ்வூர்திலேயே கி.பி. 1930இல் திரு. ஆமி சான்சன் என்பார் இங்கிலாந்திலிருந்து ஆத்திரலியாவுக்குத் 'தனிப் பறத்தலை' [Solo flight] மேற்கொண்டு 19 நாட்கள் பறந்து சென்று வெற்றி கண்டார்.

வானூர்திகளின்மீது வழிப்போக்கர்களின் நாட்டம்: வான் வழிச் செல்ல விரும்புவோர் தொகை பெருகியதும், ஐரோப்பிய வானெறி [Airlines] கே. எல். எம்., ஏர் பிரான்சு, சபேனு, உலூஃப்தான்சா, இம்பீரியல் வான்வழி [Airways] போன்ற குழுமங்கள் [companies] வான்வழித் தொடர்பினை உலகத்தின் பல பகுதிகளுக்கும் பெருக்கி, செம்மையாக நடத்தத் தலைப்பட்டன. சுங்கர்சு [The Junkers], ஃபோக்கர் [Fokker] போன்ற வானூர்தி செய்வினை நிறுவனங்கள் வழிச்செலவு வானூர்திகளை [Transport planes] வடிவமைப்பதனை கி. பி 1920,30-இல் தொடங்கின.

பீச்சு ஊர்திகளின் [Jet Aircrafts] வருகை: இரண்டாம் உலகப்போர் வரை முன் செலுத்தி [propeller] கொண்ட வானூர்திகளே வடிவமைத்துச் செய்யப்பெற்றன. இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் வானூர்தி, வடிவமைத்து உருவாக்குதலில் சிறப்பு மிக்க, மிகு பயன்தரும் புதிய முன்னேற்றத்தைக் கண்டது. இவற்றில் பீச்சுப் பொறி [Jet Engine கண்டு பிடிப்பு வானூர்தி வளர்ச்சியில் புரட்சியை ஏற்படுத்தியது. முன் செலுத்திக் கொண்டுள்ள வானூர்திகள் காற்றினை இறக்கைகளின்மீது தள்ளுவதன் காரணியமாக ஊர்திபறக்கின்றது. பீச்சு வானூர்தியில் வளி, [Gas] ஊர்தியிலிருந்து பின்னோக்கிச் செல்வதால் ஏற்படும் உந்தத் [Thrust]தால் ஊர்தி முன்னோக்கிச் சென்று பறக்கின்றது.

பீச்சுப் பொறியில் காற்று உள்ளிழுக்கப் பெற்று, அழுத்தப் பெற்று, எரிபொருள் கொண்டு எரிக்கப்பட்டுச் சுழலி [Turbine] வழியாகச் சென்று, வெளிக் கூம்பு [Exhaust Cone] வழியாக வெளியேறுவதால் வானூர்தி உந்தத்தைப் பெறுகிறது.

www.thamizham.net - Free E book No 7427

திரு. பிராங்கு விட்டில், பண்டாரகர் திரு. கிரிபித் என்போர் பீச்சுப் பொறியினைக் கண்டறிவதில் புனைந்து வெற்றி கண்டவர்கள். 1926-இல் பர் கிரிபத் உள்ளத்தில் கருக்கொண்ட எண்ணம், பல ஆய்வுகளுக்குப் பின்னர், கி. பி. 1937-இல் திரு. விட்டில் பீச்சுப் பொறியினைக் கண்டறிந்ததும் நிறைவேறியது.

திருகிறக்கை ஊர்திகள் [Helicopters]: குறைத் தொலைவுக்குள்ளேயே மேலெழும்பிச் செல்லும் வானூர்திகளின் தேவை ஏற்பட்டமையால், சுழலும் 'இறகு' கொண்ட வானூர்திகள்—திருகிறக்கை ஊர்திகள்—கண்டறியப்பெற்றன. ஐந்து நூற்றாண்டுகட்கு முன்னரே இதனை திரு. இலியனோர்டா வடிவமைத்திருந்தாரெனினும், பின்னர் பிரான்சு நாட்டினர்களான திரு. இலாவுனயும், பியெனெனும் கி.பி. 1784-இல் உரு ஒன்றினைச் செய்தனர். கி. பி. 1792-இல் திரு கேய்லே வென்பாரும் மற்றோர் உருவொன்றினைச் செய்தார். 1923-இல் திரு டிலசியெவெராவின் செங்குத்தாக ஏறவும் இறங்கவும் கூடிய வானூர்தியான 'நிமிர் வானூர்தி [Autogyro] செப்மையாகப் பறந்து வெற்றி கொண்டது. புகழ்மிக்க உருசிய நாட்டினரான திரு. சிகோர் சுகியின் முதல் திருகிறக்கை ஊர்தி கி. பி. 1940இல் வெற்றியாகப் பறந்ததைத் தொடர்ந்து அமெரிக்க நாட்டினரும் திருகிறக்கை 'ஊர்தியினை'ச் செய்ய முற்பட்டனர்.

இன்றைய நிலை: பீச்சு வானெறிகள் [Jet Airliners] மணிக்கு 925 ஆயிரஞ் சீரடி [கிலோ மீட்டர்] தொலை செல்லும் போக்கு வானூர்திகளைப் பெற்றுள்ளமையால் உலகம் மிகச் சுருங்கியுள்ளது. கி. பி. 1948-இல் விக்கர்சு வைக்கவுண்டு என்ற பீச்சு முன் செலுத்தி [Turbo-prop] அமைப்புள்ள போக்கு வானூர்தியினையும், 1958-இல் அட்லாண்டிக் கடல் கடந்த முதல் செலவு வானூர்தியான டி ஆவி. லாண்டு காமெட்டினையும் செய்து பிரிட்டன் புகழ் பெற்றது. இக்கால், கண்டத் தொடர்பு வானெறிகளில் அமெரிக்க நாட்டினரின் டக்ளசு டி. சி. 8, [Douglas D. C. 8] போயிங்கு 707, கான்வெயர் 990 என்ற வானூர்திகள் சிறந்து விளங்குகின்றன. மற்றும் உருசிய நாட்டினரின் துபொலெவ் டி யு. 104, டி.யு.114, பிரான்சு நாட்டு சுத் ஏவியேசனின் காரவீலும் உலகறிந்த வானூர்திகளாகும்.

"மீ ஒலி"ச் செலவு வானூர்திகள் [Supersonic transport Air-crafts]: ஒலியின் விரைவைவிட இரு மடங்கு வேகத்தில் செலவு வானூர்திகள் பறப்பதைச் சில ஆண்டுகட்குள் காணலாம். மணிக்கு 2,300 ஆ. சீ. [கி. மீ.] விரைவில் பறக்க உள்ள "மீ ஒலி"ச் செலவு வானூர்தி [Supersonic Transport Aircraft]யும் ஆங்கிலேயர் பிரான்சு நாட்டினர்களின் கூட்டுறவால் வடிவமைக்கப் பெற்றுக் ட்டப்பெற்று, ஆய்வுகளில் ஈடுபட்டு வரும் 'கன்கார்டு' வானூர்தி

www.thamizham.net - Free E book No 7427

சில ஆண்டுகளில் வழிச்செலவுக்குப் பயன்படுத்தப் பெறுமென்பதனை உறுதியாக நம்பலாம்.

நம் நாட்டில் வானூர்தியின் வளர்ச்சி: உலகின் பல நாடுகளெல்லாம் தொடக்கத்திலிருந்தே வானூர்தி வளர்ச்சிக்குத் தம் பங்கைச் செலுத்தின. பெங்களூரில் வானூர்திகளைப் பழுதுபார்க்கும் பிரிவாக கி.பி. 1940-இல் தொடங்கிய அமைப்பு, இன்று தன் முயற்சிகொண்டே மீ ஒலிப் போரூர்திகளைச் செய்யுமளவுக்கு வளர்ந்துள்ளது. பெங்களூரில் பறக்கும் குழாம்களுக்குத் தேவையான செயளெளிமை வானூர்திகளும், போருக்குத் தேவையான, நாட், ஏச்-எப்-24 போரூர்திகளும். 'அலூட்டி' என்னும் திருகிறக்கை ஊர்தியும் செய்யப் பெறுகின்றன.

மகாராட்டிரத்திலுள்ள நாசிக், ஆந்திரத்திலுள்ள ஐதராபாது ஒரிசாவிலுள்ள கொராபுட் ஆகிய இடங்களில் உருசிய நாட்டு உதவியோடு 'மிக்' [MIG] வானூர்தி செய்யப் பெறுகின்றது. கான்பூரில் செலவு வானூர்தியான 'ஆவ்ரோ–748 கட்டப் பெறுகின்றது. வானூர்தி வடிவமைப்பில் ஆய்வுகள் இன்றியமையாதனவாகலின் பெங்களூரில் 'நாட்டு வானூர்திக் கலையியல் ஆய்வுக்கூடம் [National Aeronautical Laboratory] அமைக்கப் பெற்றுச் செயல்படுகின்றது.

இந்திய வானூர்தித் தொழிற்சாலையின் பெங்களூர்ப் பிரிவில் பண்டாரகர் திரு. காட்கே என்பாரின் தலைமையில் வடிவமைக்கப் பெற்ற பீச்சுப் பயிற்சி வானூர்தியான [Jet Trainer] எச்.சே டி–16 செய்யப்பெறுகின்றது. உருவாக்கப்பெற்ற வானூர்தி பறக்குங்கால் உள்ள நிலைமைகளை வடிமைப்பாளருக்குக் கூறி வளர்ச்சியினை ஊக்குவிப்போர் 'ஆய்வு வானோட்டிகளே' [Test pilots]. தொடக்கக் காலத்திலிருந்தே வடிவமைப்பாளருக்குப் பேருதவியாக விளங்கி, நேர்ச்சியில் [accident] அண்மையில் எச். எப். 24 போரூர்த்தி நொருங்கியதால் மறைந்த தலைமை ஆய்வு வானோட்டியான திரு. சுரஞ்சன் தாசு இந்திய நாட்டின் வானூர்தி வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தவராவர்.

உ. த. க. 2-ஆவது மாநாடு.

கடந்த **தமிழ்ச்சிட்டு, பூஞ்சோலை, மாணக்கன்** *ஆகிய இதழ்களில் அறிவித்தபடி, மதுரை மாநாடு ஒத்திவைக்கப் பெறாமல், முன்னர் குறிப்பிட்டவாறு, தவிர்க்க வியலாத கரணியங்களால் 71' சனவரி 9–10–ஆம் நாட்களிலேயே நடைபெற்றது என்பதை அறிவித்துக் கொள்கின்றோம். மாநாட்டில் கலந்து கொள்ளற்கியலாத அன்பர்கள் ஆறுதலடையக் கேட்டுக் கொள்கின்றோம்.*

www.thamizham.net - Free E book No 7427

சேர்கிறார்கள். ஆகவே பயிற்று மொழிபற்றித் தாங்கள் நீண்டதொரு விளக்கத்துடன் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் சேலத்தில் "இந்து மதப் பாதுகாப்பு மாநாடு', என்ற ஒன்றை நடத்தி நடைமுறைக்கு ஒத்துவராத பல தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். தனித் தமிழ்க் கடல் மறைமலையடிகளார் தற்போது இருந்திருந்தால் 'தமிழ்ச் சமய' மாநாட்டைக் கூட்டியிருப்பார். இறைப் பற்றும், அதன் வழி நிற்கும் தமிழர் கண்ட சமய மெய்ப் பொருளும் இற்றை நிலையில் உள்ள 'இந்து' சமய வெறியருக்கும், 'நாத்திகர்' என்று தம்மைப் பறைசாற்றிக் கொள்வோருக்கும் புரிய வழி இல்லை. இதைப்பற்றியும், பாவாணரது '**தமிழர் மதம்**' பற்றியும் விளக்கித் தமிழருக்கு விழிப்பை ஏற்படுத்துங்கள்.

—**பொன். மாறன், மதுரை-3.**

0: 230:...தமிழ் நாட்டுத் தமிழர்களுக்காக எழுதும் தாங்கள் என்ன பயன் கண்டீர்கள்? ஏச்சும் பேச்சுந்தான் மிச்சம். ஏற்போர் யார்? நடப்போர் யார்? நினைப்போர் உளரா? தமிழ் நாட்டு மாணவர்களுக்காவது உணர்வு கொஞ்சம் இருக்கும் என்று நினைத்தேன். ஆனால், தமிழ் பயிற்று மொழி எதிர்ப்பு மாநாடு மதுரையில் நடந்ததாம்; இழிவு! மதுரையில் தமிழ் எதிர்ப்பு மாநாடு! இலண்டனில் நடக்க வேண்டியது மதுரையில் நடந்தது....—**அரிமா நெஞ்சன், மலேசியா.**

0: 231: தென்மொழியின் மடங்கல்—கன்னி ஓலையில் தனிமப் பட்டியல் கண்டு இறும்பூதெய்தினோம். மிக உயர்ந்த முயற்சி; எத்துணைப் பாராட்டினாலும் தகும். பட்டியல் சமைத்த பெருமகனார் உயர் திரு. இல. க. இரத்தினவேல் அவர்களுக்கு எம்மைச் சார்ந்தவர்களின் போற்றுதல்களைத் தெரிவிக்குமாறு வேண்டுகின்றோம். இதன் தொடர்பில் ஒரு கருத்தை வெளியிட விரும்புகின்றோம்.

ஒவ்வொரு தனிமத்தின் எழுத்துக்குறியீடும் உயிரெழுத்தாக அமையாமல் இருத்தல் நலம். ஏனெனில் வேதியல் அடிப்படையில் கூட்டிகைகளைக் (Compounds) குறியீடு செய்யுங்கால், உயிரெழுத்தால் அமைந்த எழுத்துக் குறியீடு, இடையிலோ இறுதியிலோ நிற்றல் இயலாததாகிவிடும். சான்று:

$Ca\ Co_3$ = கால்சியம் கார்பனேட்.

மேற்கண்ட தனிமப்பட்டியலின்படி, இதனை,

சுகஉ$_3$—என எழுதுதல் வேண்டும். இதனால் உகர உயிரெழுத்து, இறுதியில் அமைவதாகின்றது. இதே போல்,

H_2O = நீ$_2$உ என வரும்.

தமிழ் முறைப்படி, உயிர் எழுத்து, பிரிந்திசைக்காது. ஆதலால் உகர உடம்படு மெய்பெற்று வரும். எனவே ஒவ்வொரு தனிமத்திற்கும் ஏற்படுத்தப்படுகின்ற எழுத்துக் குறியீடு உயிரெழுத்தல்லாததாக இருத்தல் நலம். யாம் இந்தக் கருத்தை, ஆக்கப்பாங்கான முறையிலேயே தெரிவிக்கின்றோம். மற்று, பட்டியல் தொகுத்த நோக்கமும், அமைப்பாண்மையும் மிக விழுமியன. ஆசிரியர்தம் முயற்சி வெல்க! கன்னித் தமிழின் மன்னுபுகழ் ஓங்குக!

—**இ. அப்பாசுமந்திரி, தல்லாக் குளம், மதுரை-2.**

0: 232: கடந்த 'தென்மொழி' இதழில் வெளிவந்த 'தனிமப் பட்டியல்' அட்டவணை செம்மையாகவும், வளரும் அறிவியலில் செந்தமிழுக்கு உரமாகவும் இருந்ததெனினும் ஒரேயொரு வகையில்—தனி

(அடுத்த பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7427

மக் குறியீடுகளைத் தமிழில் பயன்படுத்தியதில் மட்டும் குறையுடைய தொன்றாக இருந்தது. அறிவியலுலகெங்கணும்—எல்லா நாடுகளி லும்—ஆங்கில எழுத்துகளில் அமைந்த குறியீடுகளையே தனிமங்களுக் குப் பூதவியல், இயைபியல், பொறியியல், மருந்தியல் துறைகளில் பயன்படுத்தி வருகின்றனர். ஆதலின் தமிழ்மொழியிலும் பிறமொழி யாளர்கள் போன்றே, இவ்வாங்கிலக் குறியீடுகளைப் பயன்படுத்துதல் சாலப் பொருந்தும்.

எடுத்துக் காட்டாக "Hydrogen" என்பதற்கு "நீரியை" என்று தமிழில் எழுதிக் குறியீடாக 'H' என்றே வழங்குதல் வேண்டும். அதனை விடுத்து 'நீரியை' யென்று எழுதி 'நீ' என்ற தமிழ்க் குறி யீட்டை வழங்கத் தொடங்குதல் பொருந்தாது. "Carbon-di-oxide" என்பதனைக் "கரியிரு உயிரகை" என எழுதிக்குறியீடாக CO_2 என எழுதினால் சிறப்பாகவும் "உலகத்தோடு ஒட்ட ஒழுகலுமாக" அமையும். ஆதலின் கடந்த இதழில் வெளியிட்ட தனிம அட்டவணைப் பட்டியலை உடனே திருத்தி வெளியிட வேண்டுகின்றேன்.

உடனடி இத்திருத்தத்தைச் செய்யாவிடின், தனித் தமிழில் எழுதும் அறிவியற் கட்டுரையாளர்கள் இக்குறியீடுகளைப் பயன்படுத்தி, அதன் வழி மேலும் பல சிக்கல்களை விளைக்க நேரிடலாம். ஆதலின் உடனடி யாக இத்திருத்தத்தைச் செய்ய வேண்டுகின்றேன்.

—பா. திருநாவுக்கரசு, பெங்களூர்-5.

0: 233: மதிப்பிற்குரிய ஐயா! வணக்கம். பேராயக் கட்சி (Syndicate) உடன்பாடு கொண்டுள்ள பீகார் அமைச்சரவையின் முதல்வர் திரு. கற்பூரி தாக்கூர் முதன் முதலாகப் பொறுப்பேற்றவுடன் 'அரசுத்தொடர்பான மடல்களில் ஆங்கிலத்தைச் சிறிதும் பயன்படுத்தக் கூடாதெனவும், இந்தியில்தான் இருக்க வேண்டுமெனவும், நடுவண் அரசுக்கு எழுதப்படும் மடல்கள்கூட ஆங்கிலத்தில் எழுதுவதை நீக்கி இந்தியில்தான் எழுதப்பட வேண்டுமெனவும் இந்த அரசு தீர்மானித் திருக்கிறது' எனத் தெரிவித்துள்ளார். அதற்கு மாறாக எந்த அலுவல ராவது அரசின் தொடர்பான மடல்களில் ஆங்கிலத்தைப் பயன்படுத்து வதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவரைப்பற்றி அரசினரின் கமுக்கக் குறிப்பேடுகளில் (confidential report) கருப்புப் புள்ளியிடப்படும் என எச்சரித்துள்ளார். இஃது அவர்களது தாய் மொழிப் பற்றையும் மொழி உணர்வையும் காட்டுகின்றது. இத்தகைய மொழி உணர்வு தமிழகத்திலே பிறந்து, தமிழகத்திலேயே வளர்ந்து தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட பெரும்பான்மையோர்க்குக் குறிப்பாகப் பேரா யக் கட்சிக்காரர்களுக்கு இல்லையே என எண்ணும்போது வருத்தந் தருகிறது. மேலும் இந்தியாவிலேயே இருபத்தைந்துக்கு மேற்பட்ட பல் கலைக் கழகங்களில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருப்பதை நீக்கி, இந்தியைப் பயிற்று மொழியாக ஆக்கியுள்ளார்கள். தமிழகத்திலே தமிழைப் பயிற்று மொழியாக் கொண்டுள்ள கல்விக் கழகங்கள் எல்லாம் அமைதியாகச் செயல்படுகின்றபொழுது, தமிழ் பயிற்று மொழியாவதைப் பேராயக் கட்சிக்காரர்கள் பேராயக்கட்சி மாணவர்கள், சிலரைத் தூண்டிவிட்டுத் தடையாக இருக்கின்றார்கள் எனில், சொந்த நலம் கருதியா, அல்லது அரசியல் நலம் கருதியா, எனத் தமிழக மாணவர்கள் உணர்தல் வேண்டும்.

—பெ. சு. அன்பரசன், மதுரை.

www.thamizham.net - Free E book No 7427